Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 ஐப்பசி-29 14-11-2004 ஞாயிற்றுக்கிழமை ஓசை -270

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
(சி-10704) T.P: 024-222 4247



– கட்டுநாயக்க விமான நிலையத்தில் –

# லண்டன் திரும்பிச்செல்லும் வழியில் பாலசிங்கம்–எரிக்சூல்ஹெய்ம் சந்திப்பு!

## – சனாதிபதியின் பதில் குறித்து சூல்ஹெய்ம் விளக்கினார்

(கொழும்பு)

**விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்கள் லண்டன் திரும்பும் வழியில் கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக் சூல்ஹெய்மைச் சந்தித்துப் பேசியுள்ளார். இச் சந்திப்பின் போது சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு விடுதலைப்புலிகள் தெரிவித்த யோசனைகள் குறித்து சனாதிபதி சந்திரிகா அளித்த பதில் தொடர்பாக எரிக் சூல்ஹெய்ம் அன்ரன் பாலசிங்கத்திடம் விளக்கியதாகத் தெரிய வருகின்றது.**

கடந்த வியாழக்கிழமை வன்னிக்கு வந்து தேசியத் தலைவர் அவர்களைச் சந்தித்த நோர்வேக் குழுவுக்குத் தலைமை தாங்கிய நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் சனாதிபதியைச் சந்தித்தபின் உடனடியாகவே நோர்வே திரும்பினார். எனினும் தொடர்ந்தும் எரிக்சூல்ஹெய்ம் கொழும்பில் தங்கியிருந்தார் நேற்று அரசியல் ஆலோசகரைச் சந்தித்த எரிக்சூல் ஹெய்ம் பின்னர் பிற்பகல் 3.45 மணியளவில் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இதேவேளை அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களும், அவரின் துணைவியார் அடேல் பாலசிங்கம் அவர்களும் நேற்றுக் காலை 9.45 மணிக்கு கிளிநொச்சி பொதுவிளையாட்டு மைதானத்திலிருந்து விசேட உலங்குவானூர்தி மூலம் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

நேற்று கிளிநொச்சியிலிருந்து

(12ஆம் பக்கம் பார்க்க)



## ஈ.பி.டி.பி முக்கிய உறுப்பினர்கள் வெளி நாட்டுக்கு தப்பியோட்டம்!

ஈ.பி.டி.பி. கட்சியின் முக்கிய உறுப்பினர்களான நிஸாந்தன், தினமுரசு பாஸ்கரன், ஜெகன் மூவரும் டக்ளசிடமிருந்து தப்பி வெளிநாட்டுக்கு ஓடிவிட்டனர்.

இதில் ஜெகன், நிஸாந்தன் ஆகியோர் பெருந்தொகைப் பணத்தை எடுத்துக் கொண்டு ஓடியுள்ளதாக தெரியவருகிறது. இதனிடையே ஈ.பி.டி.பி.யின் திருகோணமலை பிரமுகர் புஸ்பராஜா, மரமுந்திரிகை

(12ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் விமானங்கள் தரையிறங்க முடியாது மூவாயிரம் படையினர் முகாம்களில்

யாழ்ப்பாணத்தில் இருந்து விடுமுறையில் தமது இருப்பிடங்களுக்கு திரும்பியுள்ள 3000 இராணுவத்தினர் இடைதங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. பலாலி விமானப் படைத்தளத்தின் ஓடு பாதை புனரமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதால் இவர்கள் பயணம் செய்வதற்குரிய விமானங்கள் அங்கு தரையிறங்க முடியாத நிலை தோன்றியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுளது.

இதனால் தமது விடுமுறையினைப் பூர்த்தி செய்துள்ள இவர்கள் மீண்டும் தமது படை முகாம்களுக்கு திரும்ப முடியாத நிலை தோன்றியுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## மானிப்பாயில் மாணவன் சுருக்கிட்டுத் தற்கொலை

(வடமராட்சி)

16 வயது கூட நிரம்பியிராத பாடசாலை மாணவனொருவா சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்ட பரிதாப சம்பவமொன்று நேற்று மானிப்பாய் பகுதியினில் இடம் பெற்றுள்ளது. அந்தோனிப்பிள்ளை ஜெகதீஸ்வரன் எனும் பாடசாலை மாணவனே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் மரணம்

மன்னார் நகரத்தில் போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புடைய இளைஞரொருவர் நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

ரி.ஜெபநேசன் என அடையாளம் காணப்பட்டுள்ள இவரது கொலைக்கு எல்லாளன் படை உரிமை கோரியுள்ளது. மன்னார் பிரதேச செயலகத்திற்கு அருகாமையில் நேற்றுக்காலை பொலிசாரால் கண்டெடுக்கப்பட்ட இச்சடலத்தின் அருகில் காணப்பட்டுள்ள உரிமை கோரும் அறிக்கையில் போதைப் பொருள் வியாபாரிகளுக்கு இது தான் தண்டனை என எச்சரிக்கை விடுக்கும் வாசகம் காணப்பட்டுள்ளது. இவரது தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் இருப்பதாக கூறும் பொலிசார், இவர் வேறொரு இடத்தில் சுடப்பட்டு குறிப்பிட்ட இடத்தில் போடப்பட்டிருக்கலாம் என கருதுகின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நிதிதிரும்பும் அபாயம்

பாராளுமன்ற உறுப்பினர்களிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான நிதி ஒதுக்கீடுகள் வருடத்தின் இறுதிப் பகுதியினுள் வழமை போன்று ஒதுக்கப்பட்டுள்ளதால் அந்நிதி முழுமையாக செலவிட முடியாததோர் நிலை ஏற்படலாமென அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கைப் பயிற்சி முகாம்களை படையினர் பலப்படுத்தல்

சிறிலங்காப் படைகள் தென்னிலங்கையில் உள்ள தமது இராணுவப் பயிற்சி முகாம்களைப் பலப்படுத்தி வருவதாகத் தெரிய வருகிறது. சிறிலங்கா இராணுவத்தின் பனாகொட, குடஓயா, மின்னேரியா, மகரகம ஆகிய இடங்களிலுள்ள படை முகாம்களே அவசர அவசரமாகப் பலப்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக இணைந்த பல நூற்றுக் கணக்கான படையினரும் சேவைக் காலத்தில் தண்டனை அனுபவிக்கும் சுமார் ஆயிரம் படையினரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இல. சமாதான முன்னெடுப்புகளில் சமயங்களின் ஒத்துழைப்பு பற்றி ஆராய்வு

இலங்கையில் சமாதான முன்னெடுப்புக்களில் சமயங்களின் ஒத்துழைப்பு தொடர்பாக ஆராய்வதற்கான கருத்தமர்வொன்று நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சுண்டுக்குளியிலுள்ள வை.எம்.சி.ஏ. பொது மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ள இக் கருத்தமர்வு நாளை திங்கட்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

இந்து, கிறீஸ்தவ மற்றும் முஸ்லிம் மதப் பெரியார்கள் பலரும் கலந்து கொள்ளும் இக் கருத்தமர்வில் ஒவ்வொரு மதங்களினதும் சார்பில் சமாதான நடவடிக்கையினை வலுப்படுத்த எடுக்கக் கூடிய வழிவகைகள் தொடர்பாகவும் விசேடமாக ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதனிடையே இக் கருத்தமர்வில் கலந்துகொள்ளவென கொழும்பிலிருந்து நொபல் பெர்னாண்டோ (rev Noel Fernando) தலைமையில் பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளது மதப்பிரமுகர்களை கொண்ட குழுவொன்றும் வருகை தந்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## எழுச்சி பூர்வமாக நடைபெற்ற பூநகரி தள வெற்றி நாள் விழா

பூநகரி தளம் மீதான தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையின் 11ஆவது ஆண்டு வெற்றி விழா நேற்றுப் பூநகரியில் சிறப்புற நடைபெற்றது. முதல் நிகழ்வாக மட்டுவில் நாடு மேற்கு இராமலிங்கம் வீதிச் சந்தியில் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் எழுச்சி ஊர்வலமாக பி.ப.5.00 மணிக்கு ஆரம்பமாகி 5.30 மணிக்கு வாடியடி சந்தியை வந்தடைந்து. அதனைத் தொடர்ந்து வாடியடிச் சந்தியில் நினைவுக்கல் அமைக்கப்பட்ட இடத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான பகலவன்

(12ஆம் பக்கம் பார்க்க)





## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

10.11.2004ஆம் திகதி புளியங்குளத்திற்கும், கனகராயன் குளத்திற்கும் இடையில் முக்கிய ஆவணங்கள் அடங்கிய நீலநிற BOXER பேக் விழுந்துவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து 021-2285796 இலக்கத்திற்கு அல்லது வடபிராந்திய நிர்மாணிகள் சங்கம் கிளிநொச்சி என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும். (5274)

### தவறிவிட்டது

புளியங்கூடல் ஊர்காவற்று ரையைச் சொந்த முகவரியாக வும், 667 கொத்தம்பியாகுளம் துணுக் காயை தற்காலிக முகவரியாக வும் கொண்ட செல்லத்துரை ஜெயசீலன் என்பவரது அ.அட்டை 723351367v மாங்குளத்திற்கும், துணுக்காய்க்கும் இடையில் தவறி விடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மல்லாவி அறிவுஅமுது பொத்தகசாலையில் ஒப்படைக் கவும். செ.ஜெயசீலன். (சி-10759)

### அறிவித்தல்

அப்பன் இரும்புத் தொழிலகம் டிப்போ வீதி கிளிநொச்சி (மாவீரர் துயிலும் இல்லவீதி) சுருக்கு கேற் மற்றும் சகல விதமான கேற் வகைகள் யன்னல் கிறில் றைஸ் போன்றவை செய்து கொடுக்கப் படும். (சி-10756)


### கண்டெடுப்பு

முருகுப்பிள்ளை பார்த்தீபன் ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பு என்பவரது சாரதிய அனுமதி யட்டை, தேசிய அடையாள அட்டை இல.74104089v, பயண அனுமதி அட்டை மற்றும் சில ஆவணங்கள் மற்றும் ஒரு சிறு தொகைப் பணத்துடன் பேஸ் ஒன்று தருமபுரம் பிரதான வீதியிலிருந்து ச.ஸ்ரீஸ்கந்தராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் விளம்பரப் பணிமனை யில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரித்துடையவர் ஆதாரங் காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (சோ)

# பச்சிலைப்பள்ளி பி.செ. பிரிவிலுள்ள பல கிராமங்கள் வெள்ளத்தால் பாதிப்பு

## - 200 குடும்பங்கள் இடம்பெயர்ந்தன

(அலுவலக செய்தியாளர்)

தற்போது பெய்துவரும் மழை காரணமாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவிலுள்ள பல கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பெற்றுள்ளதுடன், 200இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இயக்கச்சி, கோவில்வயல், புலோப்பளை கிழக்கு, புலோப்பளை மேற்கு, மாசார், சேரன்பற்று, தம்பகாமம், இத்தாவில், அரசர்கேணி, கச்சார்வெளி, முகாவில், அல்லிப்பளை, தர்மக்கேணி கிராம மக்களும் மற்றும் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உமையாள்புரம் கிராமமக்களும் மேற்படி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பெற்றுள்ளனர்.



இவர்களில் 200இற்கு மேற்பட்ட குடும்பங்கள் இயக்கச்சி, கோவில்வயல், குமரபுரம் ஆகிய பாடசாலைகளில் தங்கியுள்ளனர்.

இவர்களை நேற்று கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம், தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளி. மாவட்ட பணிப்பாளர் வ. றீகன் ஆகியோர் பார்வையிட்டதுடன், அரச அதிபரின் பணிப்புரையின் பேரில் அந்தந்த கிராம சேவை அதிகாரிகளின் கண்காணிப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சமைத்த உணவுகள் வழங்கப்பெற்று வருகின்றது.

மேற்படி கிராமங்களில் கழிவு நீர்வாய்க்கால்களை மூடி இராணுவத்தினரால் மண் அரண்கள் அமைக்கப்பெற்றுள்ளமையின் காரணமாக வெள்ள நீர்கள் வெளியேற முடியாத நிலைகள் ஏற்பட்டுள்ளமையின் காரணமாகவே மேற்படி பிரதேசங்கள் யாவும் வெள்ளத்தினால் பாதிக்கப்பெற்றுள்ளதாகவும், அரச அதிபரின் பணிப்பின் பேரில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் உடனடியாக வாய்க்கால்கள் வெட்டப்பட்டு வருவதாகவும், கோவில் குடியிருப்பு, புலோப்பளை மேற்கு, அரசர்கேணி, கச்சார்வெளி, புலோப்பளை கிழக்கு, முல்லையடி, இயக்கச்சி, அல்லிப்பளை வரகுக்காடு ஆகிய பகுதிகளில் மேற்படி பணிகள் துரிதமாக இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பெற்றுள்ளது. (சோ)


கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்

## பரதநாட்டிய அரங்கேற்ற அழைப்பிதழ்

அன்புடையீர்!

சலங்கை நர்த்தனாலய அதிபர் (நெதர்லாந்து, இங்கிலாந்து, ஜெர்மனி) நாட்டிய கலாநர்த்தகி நாட்டிய விஷாரத் ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜா அவர்களின் மாணவியும் எமது புதல்வியுமான

## செல்வி சிந்தியா பிரான்சிஸ்

அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் இன்று 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை மாலை 15.00 மணிக்கு நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள் எல்லோரும் வருகைதந்து நிகழ்ச்சியைச் சிறப்பித்து செல்வியை ஆசீர்வதித்தே குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கலையரங்கம்,
DE-METROPOLE THEATRE
METROPOLEST - 11
1315KK ALMERA
TEL-0365488222
(CHஇற்கு முன்பாக)

தங்கள் நல்வரவை நாடும்...
திரு.திருமதி பிரான்சிஸ் குடும்பத்தினர்
PIANOWEG-74
1312JH-ALMERE-NETHERLAND
PH-0385469697
MOBILE: 0617546797

(சி-10615)

## 45ஆம் நாள் நினைவினில்...



மண்ணின் மைந்தனாக 29 - 12 - 1984

மண்ணின் விதையாக 01 - 10 - 2004

## லெப். சுடரொளி

(மயில்வாகனம் தசரதன்)

செல்வநாதபுரம், திருமலை.

எம்இனிய தோழனே!
விதைகுழியில் விதையாக்கப்படும் முன்பே
எம் மனங்களில் புதையுண்டு போனவன் – நீ
ஆவணங்கள் காத்திட்ட வீரமறவன் – நீ
தோழர்களின் நினைவினில் மலர்ந்தவன் – நீ
உன்நினைவில் பாதம் பதித்து – உன்
பணி தொடர்கின்றோம்.

போராளிகள்,
தலைமைச் செயலகம்.


(4932)


# சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான எழுத்துப்பரீட்சை நடைபெற்றது

## - இன்று போக்குவரத்து குறித்து விளக்கவுரை

(அலுவலக செய்தியாளர்)

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரால் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலுக் விளக்கவுரைகளை திணைக்கள மாவட்ட பரிசோதகர் ஆர்.எ.ரி. குலாஸ் வழங்கவுள்ளதுடன் நேற்று நடைபெற்ற எழுத்துப்பரீட்சை



கான எழுத்துப்பரீட்சை நேற்று கிளிநொச்சி மாட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மோட்டார் போக்குவரத்து திணைக்கள யாழ். மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர் ஆர்.எ.ரி.குலாஸ் அவர்களின் மேற்பார்வையில் நேற்றுக் காலை 9.00மணிமுதல் பிற்பகல் 4.00மணி வரை நடைபெற்ற மேற்படி சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலுக்கான எழுத்துப்பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 462 விண் ணப்பதாரிகளில் 351 பேர் எழுத் துப் பரீட்சைக்குத் தோற்றினர்.

இன்று பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் நடைபெறவுள்ள மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தினரின் மோட்டார் போக்குவரத்து சம்பந்தமான யில் சித்தியெய்தியோரின் பெயர்களையும் தெரிவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது (சோ)

### அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதியன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றையதினம் பிற்பகல் 2.00 மணிக்கு மாவட்ட விவசாயக் குழுக் கூட்டமும், பிற்பகல் 3.30 மணிக்கு சுற்றாடல் குழுக்கூட்டமும் இடம்பெறவுள்ளதெனவும் அன்றையதினம் நடைபெறும் கூட்டங்களிற்கு உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி. அரச அதிபர் தி. இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

# அமெ.படையினர்-தீவிரவாதிகள்

# பலூஜாவில் கடும் மோதல்



பலூஜா நகரில் ஈராக் தீவிரவாதிகள் மீது அமெரிக்கப்படையினர் நடத்திய தொடர் தாக்குதலில் சேதமடைந்த கட்டடங்களை அவதானிக்கும் ஈராக்கியர்கள்.

**-இரண்டு அமெ.உலங்குவானூர்திகள் சுட்டுவீழ்த்தப்பட்டன 20 படையினர் பலி**

(பாக்தாத்)

**ஈராக்-பலூஜா நகரை கைப்பற்ற அமெரிக்கக் கடற்படையினர் கடந்த திங்கட்கிழமை முதல் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்ற வேளை இவர்களை எதிர்த்து சதாம்ஹுசைனின் ஆதரவாளர்கள் வலுவான நிலையில் இருந்து, கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.**

இரு பகுதியினருக்கும் இடையிலான இந்தச் சண்டையில் இரண்டு அமெரிக்க உலங்கு வானூர்திகள் சுட்டுவீழ்த்தப்பட்டதோடு இருபது அமெரிக்கப் படையினரும், ஐந்து ஈராக்கிய தேசிய இராணுவத்தினரும் தீவிரவாதிகள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர். இருபகுதியிலும் 180 பேர் காயமடைந்துள்ளனர். ஈராக்கில் உள்ள பலூஜா நகரில் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் ஆதரவாளர்கள் வலுவான நிலையில் உள்ளனர். அவர்கள் ஒன்றரை ஆண்டுக்கு மேலாக அமெரிக்கக் கூட்டுப்படையை எதிர்த்து போரிட்டு வருகிறார்கள். கடந்த திங்கட்கிழமை அமெரிக்கக் கூட்டுப்படை பலூஜா நகர்மீது தாக்குதல் தொடங்கியது. கடற்படை வீரர்கள் தரைவழித் தாக்குதலை தொடங்கினர். அவர்களுக்கு ஆதரவாக டாங்கிப் படை சென்றது. உலங்கு வானூர்தி முன்னே சென்று குண்டு வீசின. இரண்டு உலங்குவானூர்திகளை சதாம் ஹுசைன் ஆதரவாளர்கள் சுட்டுவீழ்த்தினர்.

ஆனால் டாங்கிப்படைகள் தெருக்களில் செல்லமுடியாது சதாம் ஆதரவாளர்கள் முழுஅளவில் தாக்குதல் நடத்தினர். அவர்கள் கெரில்லா முறையில் போரிட்டனர். தீவிரவாதிகள் சரணடைவார்கள் என்று எதிர்பார்த்து அமெரிக்க இராணுவ அதிகாரிகள் ஏமாந்தனர். என்றாலும் பலூஜா நகரில் முக்கால் வாசிப்பகுதியை பிடித்து விட்டதாக அமெரிக்க அதிகாரிகள் கூறினர். அமெரிக்க இராணுவ அதிகாரி ரய்மீக் கூறியதாவது;

பலூஜா நகரின் தெற்குப் பகுதிக்கு தீவரவாதிகளைத் தள்ளி விட்டோம். அவர்கள் எங்கும் ஓட முடியாத அளவுக்கு சிக்கியுள்ளனர். வடக்குப்பகுதியில் டாங்கிப் படை தயாராகவுள்ளது. மேற்குத் திசையில் போக முடியாத அளவு யூபரெட்ஸ் ஆறு உள்ளது. வடக்குத் திசையில் அமெரிக்கக் கூட்டுப் படை இராணுவம் குவிக்கப்பட் இருக்கிறது. அதனால் அவர்களாக சரணடைய வேண்டும். அல்லது சிறைபிடிப்போம். கெரில்லாக் கோட்டைகளாக உள்ள அந்தப் பகுதியை குயின்ஸ் என்று அழைக்கின்றோம். தப்பிச் சென்ற போது தீவிரவாதிகள் றொக்கெட்டுக்களை சரமாரியாக வீசினர். இயந்திரத் துப்பாக்கியால் சுட்டனர். அதில் இருபது அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர். 180 பேர் படுகாயமடைந்தனர். ஈராக் தேசிய இராணுவத்தினர் ஐந்து பேரும் பலியாகினர். இவ்வாறு அவர் கூறினார்.

ஈராக்கின் தற்காலிகப் பிரதமர் அல்லாவி கூறுகையில் நாட்டின் பாதுகாப்பிற்கு பலூஜா நகரில் தாக்குதல் நடத்தியது சரியே. அங்கு தீவிரவாதிகள் முகாம் இட்டுள்ளனர். அவர்களை ஒழித்தால் தான் வருகிற சனவரி மாதம் பொதுத் தேர்தலை அமைதியாக நடத்தமுடியும் என்றார்.

அமெரிக்கப்படைத் தாக்குதலில் பெண்கள்-குழந்தைகள் உட்பட சிவிலியன் பலர் கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. அதை இராணுவத்தினர் மறுத்துள்ளனர்.

# பலஸ்தீனத்தில் சன.9இல் சனாதிபதித் தேர்தல்

(ஜெருசலேம்)

பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்தின் மறைவால் வெற்றிடமாகியுள்ள பலஸ்தீன சனாதிபதி பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் வகையில் விரைவில் தேர்தல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் எதிர்வரும் சனவரி மாதம் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறவேண்டுமென்று பிரதமர் அகமத் கூரே கூறியுள்ளார். பலஸ்தீன சட்டத்தின் படி சனாதிபதி மறைந்து 60 நாட்களுக்குள் தேர்தல் நடைபெறவேண்டும். இதேவேளை பலஸ்தீன நாட்டை நிர்மாணிக்க சிறந்த வாய்ப்புக்கள் உருவாகியுள்ளதாக அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார். பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்தின் மறைவின் பின்னர் பிரித்தானியப்பிரதமர் ரொனி பிளேயர் வோஷிங்டனில் சனாதிபதி புஷ்சை சந்தித்து பலஸ்தீனத்தின் எதிர்காலம் குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார். இதனையடுத்து செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே புஷ் இவ்வாறு தெரிவித்துள்ளார். இருந்தபோதிலும் இதற்கான பொறுப்பு பலஸ்தீன தலைமையைச் சார்ந்துள்ளதென்று புஷ் குறிப்பிட்டார். சனநாயக நாடாக பலஸ்தீனம் இருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட ரொனி பிளேயர் இதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பிரிட்டிஷ் தனது ஆதரவை வழங்கும் என்றும் பிளேயர் மேலும் தெரிவித்துள்ளார்.




ஆப்கானிஸ்தான் எல்லையில் அல்-ஹைதா தீவிரவாதிகளைத் தேடி அழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தானிய இராணுவம்.

# ரஷ்ய விடுதியில் தீ விபத்து 19 பேர் உடல் கருகிப் பலி!

(மொஸ்கோ)

ரஷ்யாவில் சைபீரியப் பகுதியில் உள்ள கிசைல் என்ற இடத்தில் ஒரு ஹோட்டலில் கடந்த புதனன்று இரவு பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில் ஹோட்டலில் தங்கியிருந்த மின்நிலைய ஊழியர்கள் 19 பேர் உடல் கருகிப் பலியாயினர்.

விபத்தின் போது இந்த ஹோட்டலில் 136 பேர் தங்கியிருந்தனர். நூற்றுக்கும் அதிகமானவர்களைத் தீயணைப்புத் துறையினரும், மீட்பு படையினரும் மீட்டனர்.

குழந்தைகள், பெண்கள் உட்பட 33 பேர் இந்த விபத்தில் படுகாயமடைந்துள்ளனர். பதினைந்துக்கும் அதிகமான தீயணைப்பு வண்டிகள் தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டன. தீயணைப்பு வண்டியில் இருந்த தண்ணீர் கடுங்குளிரில் உறைந்து விட்டதால் தீயை அணைப்பதில் சிரமம் ஏற்பட்டது.

இத் தீ விபத்தால் ஹோட்டலில் இரண்டு அடுக்கு மாடி நொருங்கி விழுந்துள்ளது. எனவே விபத்தில் சிக்கிப் பலியானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது விபத்துக் குறித்து விசாரிக்க ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

# விமானத்தில் தொங்கியபடி பயணம் செய்த சிறுவன் தவறி விழுந்து சாவு

சீனாவின் குன்மிங் என்ற இடத்தில் இருந்து சோங்கிங் நகருக்கு ஒரு விமானம் புறப்பட்ட போது 14வயது மதிக்கத்தக்க 2 அனாதைச் சிறுவர்கள் விமானத்தின் வெளிப்புறப்பகுதியில் தொற்றிக் கொண்டனர்.

விமானம் 700 கி.மீ தூரத்தை ஒரு மணி நேரத்தில் கடந்தது. அப்போது 23 ஆயிரம் அடி உயரத்தில் அது பறந்தது. இவ்வளவு உயரத்தில் இவ்வளவு தூரம் பறந்த போதும் ஒரு சிறுவன் மட்டும் தாக்குப் பிடித்து உயிர் பிழைத்தான்.



தென்னாபிரிக்க நாடான அபிகானில் கடந்த வாரம் ஏற்பட்ட கிளர்ச்சியினால் அங்குள்ள பிரான்சிய தூதரகப் பணியாளர்கள் வெளியேறுகின்றனர்.

# இங்கிலாந்து பாராளுமன்றத்தில் தீபாவளிக் கொண்டாட்டம்

(லண்டன்)

இங்கிலாந்து பாராளுமன்றத்தில் தீபாவளித் திருநாள் பெரிய அளவில் கொண்டாடப்பட்டது. 2 மணி நேரம் நடந்த விழாவில் தீபாவளி விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது.

இந்த விழாவில் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜாக்ஸ்ட்ரா, உள்துறை மந்திரி டேவிட் பிளங்கட் ஆகியோரும் 100 எம்.பிக்களும் கலந்து கொண்டனர்.

பாராளுமன்ற சிற்றுண்டிச் சாலை பாரம்பரிய இந்துமத வழக்கப்படி அலங்கரிக்கப்பட்டு இருந்தது. ரங்கோலி கோலங்கள், இந்துக் கடவுளின் படங்கள் பக்திப் பாடல்கள் என அமர்க்களப்பட் டது. இந்திய உணவு வகைகள் வழங்கப்பட்டன.

பிரதமர் ரொனி பிளேயர் வெளியிட்டுள்ள செய்தியில், இங்கிலாந்து முழுவதும் பல்வேறு சமூகத்தினர் தீபாவளியைக் கொண்டாடி வருகிறார்கள். இந்தப் பண்டிகைக்கு கிடைத்திருக்கும் பிரபல்யம், சமூகங்களுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்தப் பண்டிகை கொண்டு வரும் சந்தோஷமும், ஒற்றுமையும், உற்சாகமும் என் நெஞ்சைத் தொட்டது என்று குறிப்பிட்டு இருக்கின்றார். இங்கிலாந்தில் வசிக்கும் இந்தியர்கள், ஆங்கிலேய சமூகத்திற்குச் செய்த சேவைகளை இங்கிலாந்து அமைச்சர்கள் பாராட்டினர்.

## பிரதிப் பணிப்பாளர் இராஜினாமா

(வோஷிங்டன்)

அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏயின் பிரதிப் பணிப்பாளர் ஜோன் மெண்லக்கிளின் (வயது62) தான் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார்.

இவர் கடந்த சிலவாரங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார். தனது இராஜினாமா பற்றி அமெரிக்க சனாதிபதிக்கும், சி.ஐ.ஏ பணிப் பாளருக்கும் அறிவிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.



மேற்குக் கரை றமலா நகரில் யசீர் அரபாத்தின் கல்லறையில் முஸ்லிம்களின் புனித தினமான ஈதுல் பிதுர் தினத்தில் வழிபாடு நடத்தும் பலஸ்தீன இராணுவத்தினர்.

# சொந்தக்கால்களில் நிற்கக் கூடியவாறு எங்களைப் பலப்படுத்திக்கொள்ளவேண்டும்

## -த.பொ.மே.நிறுவனப் பொறுப்பாளர் க. கரிகாலன்

(முல்லை)

**விவசாயிகள் எல்லாப் பொருளாதாரத்தடைகளையும் தாண்டி நிரந்தரப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இன்னமும் கடினமாக உழைக்க வேண்டுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனப்பொறுப்பாளர் க.கரிகாலன் முல்லை. மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்டபத்திறப்புவிழாவில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும் போது தெரிவித்தார்.**

மேலும் தெரிவிக்கையில் சகல பொருளாதாரத் தடைகளையும் தாண்டி விடுதலைப் போராட்டத் திற்குபக்கபலமாகத் திகழ்ந்தவர்கள் இந்தக் கமக்காரர்கள். ஆனாலும் எங்கள் போராட்டத்தின் உச்ச பலனாக ஒரு பேச்சுவார்த்தை நடைபெற்ற போது எல்லாப்பொருட்களும் வரத்தொடங்கி விட்டது. மூடி இருந்த சந்தை திறந்து விடப்பட்டுள்ளது. தாராளமாக பொருட்கள் வந்துகொண்டிருக்கின்ற இந்தக் காலப்பகுதிக்குள் நாங்கள் இந்தப் பொருட்களின் வரவால் சோர்ந்து விடாது இந்தக்காலப்பகுதியினை எங்களுக்கு ஏற்ற விதத்தில் பயன்படுத்திக் கொள்ள ஒவ்வொரு விவசாயியும் திடசங்கற்பம் பூணவேண்டும். எங்களுக்குத் தேவையான இயந்திர உபகரணங்களையோ, அல்லது நாங்கள் இவற்றைப் பயன்படுத்துவதற்கான நவீன உபகரணங்களையோ இந்தக் காலப்பகுதிக்குள் கொண்டு வந்து சேர்ப்பதன்மூலம் இந்த திறந்துவிடப்பட்டிருக்கின்ற இந்தச் சந்தை எப்பொழுது மூடும் என்பது அரசின் கையில்தான் இருக்கின்றது. அரசு இப்பொழுது பேச்சுவார்த்தை என்று காலத்தை இழுத்தடித்துக் கொண்டு செல்லுகின்றதே தவிர தமிழர்களுக்கென்று நிரந்தரமான தீர்வை தருகின்ற எந்த ஒரு முன்னேற்பாடோ, எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கை களோ இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டு இருக்கின்றது.

ஆகவே நாங்கள்எங்கள் சொந்தக் காலில் நிற்கக் கூடிய அளவில் எங்களைப் பலப்படுத்திக் கொள்வதற்காகத்தான் இந்தத் திறந்த விட்டிருக்கின்ற சந்தையைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும். அதன் அடிப்படையிலே இந்த விவசாயிகளுக்குத் தேவையான இயந்திர உபகரணங்கள் ஓரளவுக்கு வந்து கொண்டிருக்கின்றது. இதனை நாங்கள் சரியான முறையில் பயன்படுத்தி எங்கள் உற்பத்தியை அதிகரிப்பதோடு நாங்கள் மீண்டும் ஒரு நெருக்கடி நிலைக்கு முகம் கொடுக்கக் கூடிய அளவுக்கு எங்களைப்பலப்படுத்திக் கொள்வதற்கு இந்த வாய்ப்பு வசதிகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஒவ்வொரு விவசாயியும் திடசங்கற்பம் பூண்டுகொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கான பல குறைபாடுகளையும் இவ்வளவு காலமும் இல்லாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதிலும் இந்த இடைவெளியைப்பயன்படுத்திக் கொள்வது அவசியமானதாகும். உண்மையிலேயே ஒவ்வொரு விவசாயியும் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொள்வதன் மூலம் பிற்காலத்தில் அவர்களுக்கு அது நன்மை தரக்கூடியதாக இருக்கும். இதனை முழுமையாக செயற்படுத்துவதற்கு இந்தத் திணைக்களம் பாடுபடவேண்டும். அதற்கான வசதிகளையும், வாய்ப்புக்களையும் இப்பொழுது இருக்கின்ற இந்தக்காலப்பகுதியை நாங்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடும் தொடர்பு கொண்டு ஏற்படுத்துவதன் மூலம் தான் இந்த விவசாயிகளுடைய பிற்கால வாழ்க்கைக்கு நாங்கள் ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொண்டவர்களாக இருப்போம்.

அதேபோன்று இந்த விவசாய அமைப்புக்களையும் சரியான முறையிலே பலப்படுத்தி பலத்தோடு நாங்கள் செயற்படுத்துவதன் மூலம்தான் எங்கள் எதிர்காலத்தையும் நாங்கள் சிறப்பாக்க முடியும் என்று கூறினார். (20)

## 5000 பனம் விதைகள் நாட்டப்பட்டன

மாவீரர் நாளை முன்னிட்டும் தமிழீழ தேசிய தலைவரின் 50 ஆவது அகவையை முன்னிட்டும் முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து நந்திக்கடல் கரையோரத்திலும் முல்லை நகரின் பல பாகங்களிலும் சுமார் 5000 பனம் விதைகளை நாட்டியுள்ளனர். (20)

# வவுனியா மாவட்ட செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வவுனியா அரசசெயலக மாநாட்டு மண்டபத்தில் அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் கடந்த புதன்கிழமை மாலை 3.00மணிக்கு நடைபெற்றது.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை, பிரமாண அடிப்படையிலான நன்கொடை ஆகிய புதிய திட்டமுன்மொழிவுகள் 2005ஆம் ஆண்டிற்கான அங்கீகாரத்திற்காக முன்மொழியப்பட்டன. அத்துடன், 2004ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டிற்கான வவுனியா மாவட்ட ஒருங்கிணைந்த செயற பாட்டுத் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை மீளாய்வு, 2004 ஆம் ஆண்டிற்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் பிறப்பு, இறப்பு திருமணப்பதிவாளர் பிரிவுகளை மீள உருவாக்கல் ஆகிய விடயங்கள் தொடர்பாக இவ் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான வினோநோகராதலிங்கம், சிவநாதன் கிஷோர் வவுனியா மாவட்டத்தில் சகல திணைக்களத்தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (10)

# திருமலை நகரில் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாத அவலம்!

## - நகர சபையினர் மீது குற்றச்சாட்டு

(திருமலை)

திருகோணமலை நகரின் சகல பகுதிகளிலும் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருகிக் காணப்படுவதாகவும் அதனைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் திருகோணமலை நகரசபையின் குப்பை கூளங்களை அகற்றும் சேவை காணப்படுவதாகவும் மத்திய சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புத்திணைக்களம், மாகாண ஆளுநருக்கு அறிவித்துள்ளது.

இவ்வாண்டில் திருமலை நகரில் டெங்கு காய்ச்சல் மார்ச் மாதத்தில் பரவியது. அதனைச் சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் அப்போது ஒருவர் டெங்குக்குப் பலியானார்.இரண்டாவது தடவையாக ஒக்ரோபரில் மீண்டும் டெங்குக் காய்ச்சல் பரவ ஆரம்பித்துள்ளது. இன்னும் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியாதநிலை சுகாதாரத் திணைக்களத்தினருக்கு ஏற்பட்டுள்ளது. இரண்டாம் தடவை டெங்கு பரவ ஆரம்பித்த பின்னர் ஒரு குழந்தை பலியானது 31 பேர் டெங்கு காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனர்.

இப்போது டெங்கு காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் திருகோணமலை நகரில் பரவலாகக் காணப்படுவதாக பிராந்திய தொற்று நோய்த் தடுப்பு அதிகாரி டாக்டர் து.தவக் கொடிராஜா தெரிவித்தார்.

நகரின் வீதிகளில் காணப்படும் குப்பை கூளங்களை அகற்று வதற்கு ஏற்படும் தாமதம், டெங்கு நுளம்பு உற்பத்தியாவதற்குக் காரணமாக அமைவதாகவும் அவர்கூறினார். இது குறித்துப்பல மாநாடுகள் நடத்தப்பட்டனநகரசபைக்குத் தேவையான வாகன வசதிகள் இல்லாத காரணத்தினால்,வீதிகளில் காணப்படும் குப்பைகளை முற்றாக அகற்ற முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் திருமலை நகர லயன்ஸ் கழகமும் நியூசென் சுரி லயன்ஸ் கழகமும் சேர்ந்து இரண்டு தினங்கள் திருமலை நகரின் பெரிய கடைப் பிரதேசத்தின் வீதி ஓரங்களில் காணப்படும் குப்பைகளை அகற்றுவதில் ஈடுபட்டன. திருமலை நகரைச்சுத்தமாக வைத்திருக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவதாக திருமலை நகரில் செயற்படும் லயன்ஸ்கழகம், றோட்டரிக்கழகம் ஆகியவற்றின் ஆதரவு நாடப்பட்டுள்ளது. (25)

# மண்ணையும் மக்களையும் நேசிக்கின்ற போராளிகளுக்கு அன்பு முன்னுதாரணம்

## நினைவு நிகழ்வில் பாண்டியன்

பூநகரி வெற்றிச் சமரை நினைவு கூருவதாக இருந்தால் அன்பு அண்ணனை மறக்க முடியாது. அன்பு அண்ணனை நினைவு கூருவதானால் மணலாறு மண்ணை மறக்க முடியாது. உண்மையில் ஒரு விடுதலைப் போராளி எப்படி தனது மண்ணையும், மக்களையும் நேசிக்கின்றான். தன்னு டைய மண்ணுக்காகவும், மக்களுக்காகவும் அயராது பாடுபடுகின்றான் என்பதற்கெல்லாம் அன்புவே முன்னுதா ரணமானவர்.

இவ்வாறு மணலாற்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற லெப். கேணல் அன்புவின் 11 ஆம் ஆண்டு நினைவு நாள நிகழ்வில் போராளி பாண்டியன் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த மணலாறுக் காட்டிலே எங்கள் தலைவரைப் பிடிப்பதற்காக பல இராணுவ நடவடிக்கைகளைச் செய்து அழிவுகளைத்தான் இந்தியஇராணுவம்சந்தித்தது. அப்போது இந்தக் காட்டிலே சில நூற்றுக்கணக்கான போராளிகளே தலைவருடன் இருந்தார்கள். இந்த மண்ணிலே வீரம் செறிந்த போர் நடந்தது. சில நூற்றுக்கணக்கான போராளிகள் தலைவருடைய நேரடி வழிநடத்தலில் அந்தப் போரைச் செய்தார்கள். அந்தச் சண்டையின் ஒரு பகுதியை இந்த அன்பு அண்ணன் வழிநடத்தினார். இந்த நாயாற்றுப் பகுதியிலே இந்திய இராணுவத்தினமீதான பல ஊடுருவல் தாக்குதல்கள் கூட அன்பு அண்ணா அவர்களால் வழிநடத்தப்பட்டது.

காட்டில் உணவு நெருக்கடி ஒன்று வந்தவுடன் தலைவர் அன்புவைத் தெரிவு செய்கின்றார். வெளியில் நின்று ஒரு குறிப்பிட்ட ஆட்களுடன் நின்று போராளிகளுக்குத் தேவையான உணவைக் கொண்டு வருவதற்கான பொறுப்பையும் அவரிடமே கொடுத்தார். வெளியில் இருந்து உணவு, உடைகள் என்பவற்றைச் சேர்த்து அவற்றைப் பாதுகாப்பாக காட்டில் உள்ள போராளிகளுக்கு அனுப்புவதில் அன்புவின் பங்கு மிகப்பெரியது.

இந்த மணலாறுக் காட்டில் தலைவர் ஒரு மரபு வழிப் படையையே உருவாக்கக் கூடியளவுக்கு; நான் நினைக்கிறேன். இந்த மண்ணில் இருந்துதான் முதல் படை புறப்பட்டிருக்க வேண்டும்.தனக்கென்ற ஒரு சீருடை அணிந்து ஒரு பெரிய படையணியாக முதன் முதலில் தலைவர் போருக்கு அனுப்பினார் என்றால் இந்த மண்ணிலிருந்துதான் எங்களுடைய சீருடையை தலைவர் தெரிவு செய்து இதை எப்படி பெற்றுக்கொள்வது எங்கே எதை வேண்டுவது என்று தீர்மானித்து அந்தப் பொறுப்பைக் கூட அன்பு அண்ணாவிடமே ஒப்படைத்தார். ஒரு சாதாரணமான போராளியாக இருந்து தலைவர் சொன்ன பணியெல்லாம் மிகவும் கெட்டித்தனமாகச் செய்து முடித்தவர் அன்பு அண்ணா.

போர் ஓய்வுக்கு வந்து இந்தியப் படையினர் இந்த மண்ணைவிட்டு வெளியேறிய பின்பு தலைவர் இந்தப் போராட்டத்தை இன்னும் உத்வேகமாக நடத்து வதற்கு யாழ்ப்பாணத்தை நோக்கிப் போக வேண்டிய தேவை இருந்தது. அப்போது கூட இந்தக் காட்டிற்கு மணலாறு மண்ணுக்குப் பொறுப்பாக அன்பு அண்ணனை நியமித்தார். அப்போது தலைவர் சொன்னார் இந்த மண்ணை என்றைக்குமே மறக்க முடியாது. இந்த மண் எப்போதுமே எதிரியின் கையில் போகக் கூடாது. காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களுடையது. இன்று வரைக்கும் இந்தச் சொல் இந்த மண்ணின் மக்க ளின் ஒத்துழைப்போடு ஆயுதமேந்திய பெருமையோடு இந்த மண் காப்பாற்றப்பட்டிருக்கின்றது.

தமிழீழத்திலே முதன் முதலில் துணைப்படையணி உருவாகியது. இந்த மண்ணிலேதான் தமிழனின் வீரத்தையெல்லாம் ஏட்டிலே படித்திருக்கின்றோம். நாங்கள் கண் ணாலே பார்த்துக்கொண்டிருக்கின்றோம். கூடவே இருக் கின்றோம். உண்மையிலேயே இந்த விடயத்தை திருப்பித் திருப்பி இந்தச் சின்னஞ் சிறிய சிறார்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய அவா. வீரம் செறிந்தவர்களாக வாழ வேண்டும். அவர்கள் எங்களுடைய வீரத்தைத் திருப்பித்திருப்பிப் பார்க்க வேண்டும், நினைவு கூர வேண்டும். கடந்த கால பட்டறிவுகளை நினைவு கூர்ந்து எதிர்காலத்தை எதிர்கொள்ளக் கூடியவர்களாக நாங்கள் வளர வேண்டும்.

சிங்கள இராணுவம் இந்த மணலாறுக் காட்டைத் தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும் என்பதற்காக எத்தனையோ இராணுவ நடவடிக்கைகளைச் செய்தன. கிட்டத்தட்ட ஏழு இராணுவ நடவடிக்கைகளைச் செய்தன. எல்லா இராணுவ நடவடிக்கைகளையும் இந்தப் பெருமைக்குரிய அன்பு அண்ணன் எதிர் நடவடிக்கைக்குத் தலைமை தாங்கி முறியடித்தார். எங்களுடைய தலைவரின் வழிகாட்டலிலே நாங்கள் எல்லோரும் ஒற்றுமையுடனும், உறுதியுடனும் ,துணிவுடனும், எதிரியை எதிர்கொள்ளுமளவு எங்களை நாங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (தீ,லோ)





# கடற்படை பயிற்சி முகாமால் சுழிபுரம் மீனவர் பாதிப்பு

## மீனவர் சங்க சமாசத்திற்கு புகார்

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒ:ப்பந்தம் நடைமுறைகளிற்கு மாறாக சுழிபுரம் கரையோரப் பகுதியினில் கடற் படையினரால் அமைக்கப்பட்டு வரும் பயிற்சித் தளத்தினால் நூற்றுக் கணக்கான மீனவர்கள் தொழிலை இழக்க வேண்டியதோர் சூழல் ஏற்படலாமென யாழ். மாவட்ட மீனவ சமாசங்களின் சம்மேளனம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பாக நேற்று முன் தினம் யாழ். நகரப் பகுதியினில் சம்மேளனப் பணிமனையில் மீனவ சங்கப் பிரதிநிதிகள் கூடி ஆராய்ந் துள்ளனர். பாரிய கடற்படை முகாம் களைக் கொண்ட சுழிபுரம் பகுதியினில் தமது பயிற்சித்தளமொன்றை நிறுவுவதில் கடற்படையின் வட பிராந்திய தலைமை தற்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

இந்நிலையினில், தம்மால் அமைக்கப்பட்டுவரும் கடற்பயிற்சித் தளத்தினையண்டியுள்ள பகுதியினுள் மீனவர்களினை வரக்கூடாதென அறிவித்துள்ள கடற்படை, அத்துடன், அப்பகுதியினுள் மீன்பிடியில் ஈடுபடவும் தடை விதித்துள்ளது.

இவ் உத்தரவு தொடர்பாக அப் பகுதி மீனவ சங்கம் சமாசங்களின் சம்மேளனத்திற்கு முறைப்பாடு செய்துள்ளது. ஆயினும் இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்ய மறுத்துவரும் மீனவர் சங்கம், அவ்வாறு தாம் புகார் செய்த ால் கடற்படையினரால் மேலும் கெடுபிடிகளுக்குள்ளாக்கப்படலாமெனவும் சமாசத்திற்கு புகார் செய்துள்ளது.

பலாலி படைத்தளத்தினை உள்ளடக்கியுள்ள உயர்பாதுகாப்பு வலயத்தின் ஓர் எல்லையாக இருந்துவந்த சுழிபுரம் கடற்பரப் பினில் மீன்பிடியில் ஈடுபட அண்மைக் காலங்களிலேயே கடற்படை அனுமதித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. அரசு புலிகளுக்கிடையிலான யுத்தநிறுத்த உடன்படிககை அரசியலில் உள்ள தற்போதைய சூழநிலையிலும் மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் விதமாகக் கடற்படையினர் இப்புதிய படைமுகாம் அமைக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். (32, 33)

# கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் அரசு யாழ்.மாவட்டத்திற்கு பாரபட்சம் காட்டுகிறது

## யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் குற்றச்சாட்டு

கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் சிறிலங்கா அரசாங்கம் யாழ். குடாநாட்டுக்குப் பாராபட்சம் காட்டிவருகிறது என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக ஏற்பட்டுவரும் கல்வி நிலை வீழ்ச்சி பற்றி ஆராய்ந்து உரிய தீர்வைக் காண்பதற்கான தொடர் ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி உரை நிகழ்த்துகையிலேயே கல்விப்பணிப்பாளர் இந்தக் குற்றச்சாட்டினை முன்வைத்துள்ளார்.

அரச நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டுகிறது. ஒப்பீட்டளவில் ஏனைய பகுதிகளை விட மிகச்சிறிய அளவிலான நிதியே இங்கு கிட்டுகிறது. குறிப்பாக கிழக்கிலுள்ள அரசியல் வாதிகளும் சரி, அரச உயரதிகாரிகளும் சரி கூடியளவிலான நிதியினையும், புலமைப்பரிசில்களையும் தமது பகுதிகளுக்கென எடுத்துக்கொள்கின்றனர். தமது பதவிகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவே இவ்வாறு அவர்கள் செயற்படுகின்றனரோ என சந்தேகம் எழுகின்றது. இவ்விடத்தினில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்கறைகாட்ட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்ட அவர் பாடசாலைகளிடையே வளங்கள் சரிசமமாகப் பங்கிடப்படுவதில்லையென்ற கருத்தை மறுதலித்த வலயக்கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் இவ்வாண்டினில் ஒதுக்கப்பட்ட நிதியினில் பெருமளவு பின் தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளிற்கே செலவு செய்யப்பட்டதாகக் கூறினார்.

இதனிடையே அங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் "யாழ். மாவட்டத்திலுள்ள சில பிரபல்ய பாடசாலைகள் தொடர்ந்தும் அபிவிருத்தி பெற்றுச் செல்கின்றன. அதனைத் தேடி, தமது பகுதிகளிலுள்ள பாடசாலைகளைக் கைவிட்டு மாணவர்கள் வருகின்றனர். இவ்வாறான நிலை தொடர்ந்து நீடிக்க அனுமதிக்க முடியாதென வலியுறுத்தியிருந்தார்.

# எமது மக்களின் ஒற்றுமையைச் சீர்குலைக்க சிங்கள தேசம் கவனமாக செயற்படுகிறது

## மக்கள் ஒன்றுதிரண்டு முறியடிக்க வேண்டும்-செழியன்

(யாழ்ப்பாணம்)

**சிங்கள தேசம் எமது மக்களுடைய ஒற்றுமையைச் சீகுலைப்பதிலும் தமிழ்த் தேசியத்தை உடைப்பதிலும் மிகவும் கவனமாக செயற்பட்டுக்கொண்டு இருக்கின்றது. நாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு அதை முறியடிக்க வேண்டும். எமது மக்களுக்கு சுதந்திரமான நிம்மதியான வாழ்வு வேண்டும் என்பதற்காகவே நாம் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.**

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சிசெழியன் குறிப்பிட்டார்.

நல்லூர் நாவலர் கலாச்சார மண்டபத்தில் சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவர் ரகு தலைமையில் இன்றைய நிலை சம்பந்தமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய செழியன் சிங்கள தேசம் சமாதான காலத்தில் எம்மை அழித்தொழிக்கும் செயற்பாட்டிலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது. இங்குநாம் தோல்வியைத் தழுவிக்கொண்டிருக்கின்ற- தோல்வி அடைந்திருக்கின்ற ஒரு விடுதலைப் போராட்டத்தைப் பற்றிக் கதைக்கவில்லை.

வெற்றி அடைந்துள்ள வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்ற ஒரு விடுதலைப் போராட்டத்தைப் பற்றியே கதைத்துக் கொண்டிருக்கின்றோம் தலைவரும் போராளிகளும் மட்டும் எமது போராட்டத்தை வெற்றி பெறச் செய்ய முடியாது. மக்கள் ஒவ்வொருவருடைய பங்களிப்பும் விடுதலைக்கு இருக்க வேண்டியது அவசியமாகும்.

கொழும்பில் பாதுகாப்புக் குறைவாகக் காணப்படுகின்றது என்று அரசாங்கம் கூறுகின்றது. கொழும்பில் பாதுகாப்புக் குறைவென்றால் யாழ் குடாநாட்டில் ஏன் இவ்வளவு பெரும் தொகையான படையினரைக் குவித்து வைத்துள்ளார்கள் என்பதையிட்டுச் சிந்திக்க வேண்டும்.

யாழ். குடாநாட்டில் பல்லாயிரக்கணக்கான படையினரைக் குவித்துவைத்துக் கொண்டு அப்பக்கடைகள்,களியாட்டங் கள் ஆடம்பர நிகழ்ச்சிகள் என்று செயல்படுத்திக் கொண்டு எம்மண்ணில் கலாச்சாரச் சீரழிவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கையில் மிகவும் அக்கறையாக செயற்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

இந்த நிலையைத் தொடர்ந்தும் செய்யுமாக இருந்தால் எமது இனமே சீரழிந்து போகும் நிலைமையே ஏற்படும். இம்மண்ணில் இராணுவம் நிலை கொண்டுள்ளதைத் தொடர்ந்து இடம் பெற்றுவரும் வன் செயல்கள் போன்று என்றும் இம்மண்ணில் இடம் பெற்றதில்லை. பெற்றதாயைப்பிள்ளை வெட்டிப் புதைக்கும் நிலைமையும், பெற்றதாய் குழந்தையை வெட்டிப்புதைக்கும் நிலைமையும் காணப்பட்டதில்லை.

போராட்டத்தை விற்கவும், அதனை கொச்சைப் படுத்தவும் இன்று பலர் முயன்று கொண்டும் இருக்கிறார்கள். இத்தகையவர்களின் நடவடிக்கையை நாம் அனைவரும் ஒன்று திரண்டு முறியடிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (41)

# காணாமற் போன மீனவர் சடலமாக மீட்பு

(வடமராட்சி)

காங்கேசன்துறைக் கடற்பரப்பில் கரையொதுங்கிய சடலம் வல்வெட்டித்துறை, ஆதி கோவிலடியை வதிவிடமாகக் கொண்ட நவரத்தினம் கருணாகரன் (வயது-43) என அவரது மனைவி மற்றும் சகோதரியாகியோர் கடந்த வியாழக்கிழமை அடையாளம் காட்டியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை காலை வல்வெட்டித்துறைப் பொலிசாரினால் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியிலுள்ள காங்கேசன் துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்த குடும்பத்தவர்களே சடலத்தை அடையாளம் காட்டியுள்ளனர்.

இதேவேளை சம்பவ இடத்திற்கு நேரில் விஜயம் செய்த மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் மரண விசாரணைகளின் பின்னர் சடலத்தைக் குடும்பத்தவர்களிடம் ஒப்படைக்கவும் உத்தரவிட்டார். அத்துடன் முதலில் சடலத்தைக் கடலில் கண்டிருந்த மற்றும் அது தொடர்பான தகவல்களை அளித்திருந்த கடற்படையினரது வாக்கு மூலங்களினையும் அவர் பதிவு செய்திருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவுவேளை வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடி கடற்பரப்பினில் சக மீனவர் சகிதம் தொழிலுக்குச் சென்றிருந்த குறித்த மீனவர் கடலினுள் தவறி வீழ்ந்து காணாமற்போயிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27,33)

# புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகத்திற்கான நிதி மூன்றாவது தடவையும் திரும்பும் நிலையில்

## அப்பகுதி மக்கள் கவலை

(நல்லூர்)

புன்னாலைக்கட்டுவன் மத்திய மருந்தகக் கட்டடத்திற்கென பெறப்பட்ட நிதி மூன்றாவது தடவையாகவும் திரும்பிச் செல்லவுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மத்திய மருந்தகத்தைக் கட்ட 40 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் உரிய திணைக்களத்தினர் இதில் அக்கறை காட்டாமையினால் திரும்பிச் சென்றுள்ளது.

இவ்வாண்டு 70 இலட்சம் ரூபா நிதி கிடைக்கப்பெற்ற போதிலும் அதனையும் உரிய முறையில் வைத்தியசாலை அமைப்பதற்கு நடவடிக்கை யெடுக்காமையினால் திரும்பிச் செல்லவுள்ள நிலைமை யில் இருக்கின்றது.

இதுவரை காலமும் தனியார் ஒருவருக்கு சொந்தமான கட்டடத்திலேயே இவ் மத்திய மருந்தகம் இயங்கி வந்துள்ளது. தற்போது காணியை கொள்வனவு செய்து மருந்தகம் அமைந்திருந்த கட்டடத்தின் ஒரு பகுதியை இடித்து வருகின்றதுடன் மத்திய மருந்தகத்தை மாற்றும் படியும் வேண்டப்பட்டுள்ளது.

12பரப்புக் காணியை அப்பகுதியைச் சேர்ந்த சு.செல்லப்பா என்பவர் தாய் தகப்பன் ஞாபகார்த்தமாக கணேசா சனசமூக நிலையம் மூலம் மத்திய மருந்தகத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளபோதிலும் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (41)

# புனரமைப்புச் செய்யப்படாத யாழ். பண்ணை வீதி

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக யாழ்ப்பாணம்-தீவகப் பகுதிகளுக்கிடையிலான போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலிருந்து பண்ணைப்பால மூடாக தீவகம் செல்லும் பிரதான வீதி படையினரது பாதுகாப்புக் கெடுபிடிகள் மற்றும் அரசின் புறக்கணிப்பு நடவடிக்கைகள் என்பவற்றால் மிக நீண்டகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாதநிலையில் சேதமடைந்து காணப்படுகிறது.

சேதமடைந்த வீதிகளில் மழை நீர் தேங்கி நிற்பதாலும் இவ்வீதியின் சில பகுதிகள் வெள்ள அரிப்புகளுக்கு இலக்காகி சேத மடைந்தும் காணப்படுகிறது. (33)

# கால் நடை அபி. அமைச்சின் அதிகாரிகள் யாழ். விஜயம்

தேசிய கால் நடை அபிவிருத்தி தொடர்பாக வகுக்கப்படவுள்ள பொதுத் திட்டத் தினுள் யாழ்.குடாநாட்டினையும் இணைத்துக் கொள்வது தொடர்பாக ஆராய்வதற்கென, தொடர்புடைய அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் யாழ் விஜயம் செய்துள்ளனர்.

தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பொது முகாமையாளர் கலாநிதி சுசித் மற்றும் அமைச்சின் பணிப்பாளர் கலாநிதி கதிரவேற்பிள்ளை உள்ளிட்ட குழுவொன்றே யாழ்.குடா நாட்டிற்கு விஜயம் செய்துள்ளது.காலை 11 மணியாளவில் யாழ். செயலகத்திற்கு விஜயம் செய்த இக்குழு அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான செயலக அதிகாரிகளையும் விவசாய மற்றும் கால் நடை அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தினர்.

சுமார் மூன்று மணி நேரத்திற்கு மேலாக யாழ். குடா நாட்டின் கால் நடை அபிவிருத்தி தொடர்பாக இக்குழுவினர் பேச்சுக்களை நடாத் தியிருந்தனர்.பின்னர் திருநெல்வேலிப் பகுதியிலுள்ள கால்நடை அபி விருத்தி நிலையத்தின் யாழ் அலுவலகத்திற்கும் குழுவினர் நேரில் விஜயம் செய்திருந்தனர்.

ஆளும் அரசினில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் சார்பு பாராளுமன்ற உறுப்பினரே இத்துறையில் அமைச்சுப் பதவி வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (27)

# யசீர் அரபாத் பலஸ்தீனத்தின் விடி வெள்ளி



பலஸ்தீன அதிபராக இருந்த மாபெரும் விடுதலைப் போராட்ட வீரர் யசீர்அரபாத்தின் மரணம் மர்மங்களுக்கு மத்தியில் உறுதியாகிவிட்டது. பலஸ்தீனம் கொந்தளிக்கிறது. அடக்கப்பட்ட இனத்தின் விடிவிற்காய்ப் போராடிய ஒரு சுதந்திரப் போராட்ட வீரனை இழந்ததால் பலஸ்தீனம் மட்டுமல்ல விடுதலை வேண்டித் துடிக்கும் நாடுகளும், அடக்கு முறைக்கு எதிரான நாடுகளும் தமது அஞ்சலியைச் செலுத்துகின்றன.

1929 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி ஜெருசலேம் நகரில் பிறந்த அரபாத் எகிப்திய வம்சாவளியாவார். ஆரம்பக்கல்வியை எகிப்திலேயே கற்றார். தனது 17 ஆவது வயதில் பலஸ்தீனத்தை ஆக்கிரமித்த பிரிட்டிஸ் மற்றும் யூதர்களுக்கு எதிரான போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

1949 ஆம் ஆண்டு பலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேல் படைகளின் ஆக்கிரமிப்பு நடைபெற்றது. இவ் ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் இருந்த இளைஞர்களை ஒன்றுசேர்க்க 1958 ஆம் ஆண்டளவில் அல்பாட்டா என்னும் விடுதலை இயக்கத்தை ஆரம்பித்தார். இதன் பின்னர் 1964 ஆம் ஆண்டளவில் பலஸ்தீன விடுதலைக்காய் போராடும் போராட்டக் குழுக்கள் எல்லாவற்றையும் ஒன்றிணைத்து பீ.எல்.ஒ.என்னும் விடுதலை அமைப்பினை உருவாக்கி 1969, ஆம் ஆண்டு அவ் அமைப்பிற்குத் தலைவரானார்.



தற்போதுபலஸ்தீன விடுதலை இயக்கத்தின்தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கும் மஹமூட் அப்பாஸ்சுடன் அரபாத்

சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக பலஸ்தீன விடுதலைக்காகப் போராடிய யசீர் அரபாத் அக்காலகட்டத்தில் பல அந்நிய நாட்டு அடக்கு முறை சக்திகளின் சவால்களை எதிர்த்து நின்றார். 1953 ஆம் ஆண்டு எகிப்து நாட்டுத்தலைவருக்கு அரபாத் இரத்தத்தால் எழுதிய கடிதம் ஒன்றில் 'பலஸ்தீனத்தை மறக்க வேண்டாம்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

யசீர் அரபாத் தலைமையிலான பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை நியாய பூர்வமானதாகக் கருதிய பல உலக நாடுகள் இவ் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்தன. அதன் பின் பலஸ்தீனம் சார்பாக ஐ.நாடுகள் சபையின் ஜெனீவா கூட்டத் தொடரில் உரையாற்றும் சந்தர்ப்பம் அரபாத்திற்குக் கிடைத்தது.

1993 ஆம் ஆண்டு காலப்பகுதியில்அமெரிக்காவின் அனுசரணையுடன் இஸ்ரேலுடன் ஒரு சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டார். ஒஸ்லோ பிரகடனப்படி ஏற்பட்ட இவ் ஒப்பந்தம் இஸ்ரேலின் தன்னிச்சையான போக்குகள் காரணமாக கோள்விக்குறியானது ஒப்பந்த விதிகள் மீறப்பட்டன. இதனால் பலஸ்தீனம் பல அழிவுகளைச் சந்திக்வேண்டிய நிலையிலும் சில ஆதிக்க சக்தி நாடுகளின் அழுத்தங்களுக்கும் ஆளாக வேண்டியதாக இருந்தது.

ஒப்பந்த விதிகளை மீறி இஸ்ரேல் செயற்பட்டதனால் பலஸ்தீன மக்கள் கொதிப்படைந்தார்கள். இந் நிலையில் ஒப்பந்த விதிகளை மீறி இஸ் ரேலுடன் முரண்பட்டு செயற்பட முடியாத நிலையில் அரபாத் பல நெருக்கடிகளைச் சந்தித்தார். இக்கால கட்டங்களில் பலஸ் தீனத்தில் சுயாதீனமான பல விடுதலை அமைப்புக்கள் தோன்ற ஆரம்பித்தன.

1993ஆம்ஆண்டு இஸ்ரேலுடன் செய்து கொண்ட சமாதான உடன்படிக்கை காரணமாக அவ் ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசை இஸ்ரேலுடன் பகிர்ந்துகொண்டார் அரபாத்.

யசீர் அரபாத் போராட்ட வாழ்வில் பிரவேசித்த பின் தமது எதிரிகளுக்கு எதிரான பல வெற்றிகரத் தாக்குதலை நடத்தி உலகிற்கு தன்னை அடையாளம் காட்டியிருந்தார்.

* இவரது ஆரம்ப கால விடுதலை அமைப்பான பத்தா (FATHA) அமைப்பின் முதலாவது தாக்குதலான இஸ்ரேலிய நீர்ப்பம்பி மீதான தாக்குதல் அரபாத் தலைமையிலான தாக்குதல் ஆகும். இத்தாக்குதல் 1965 ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

*1968 ஆம் ஆண்டு அரபாத்தின் பத்தா அமைப்பு இஸ்ரேலிய பாதுகாப்புப் பிரிவை குறிவைத்துத் தாக்குதல் நடத்தியது. இத் தாக்குதலில் 150 பலஸ்தீன தீவிரவாதிகளும், 29 இஸ்ரேலிய படைகளும் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல் பத்தா அமைபபிற்கு பெருவெற்றியெனக் கருதப்பட்டது. இத்தாக்குதல் மூலம் அரபாத்தின் பாத்தா விடுதலை இயக்கம் உலகில் பிரபலமானதுடன் அரபாத் தேசிய வீரனாகப் பிரகடனப்படுத்தப்பட்டார். இதன் பின்பத்தா அமைப்பில் பல பலஸ்தீன இளைஞர்கள் தம்மை இணைத்துக் கொண்டனர்.



அரபாத்தின் சிறு பிராயத் தோற்றம்

* 1970 ஆம் ஆண்டு யூன் மாதம் முதன் முறையாக வெளிப்படையான போராட்டங்களை முன்னெடுத்தார் யசீர் அரபாத்.

இவ்வாறான விடுதலைப் போராட்ட வரலாற்றுப் பின்னணியைக்கொண்ட யசீர் அரபாத்தின் இழப்பென்பது பலஸ்தீன மக்களைப் பொறுத்தவரை பேரிழப்பு என்பது மறுக்க முடியாத உண்மை.

11.11.2004 அன்று வெளிவந்த அரபாத்தின் மரணச்செய்தி பலஸ்தீனத்தின் உயர் அரச பீடங்களிலும் சாதாரண மக்களிடையேயும் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது. யசீர் அரபாத்தலைமை தாங்கி வந்த பலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்பை முன்னாள் பிரதமர் மஹ்மூக் அப்பாஸ் கொண்டு நடத்துவார் என அறிவிக்கப் பட்டிருக்கிறது. எனினும் யசீர்அரபாத் வகித்த தலைமைப்பதவியின் தன்மை புதியவரிடம் இருக்குமா? என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.



டும் சுகயீனமுற்ற நிலையில் மருத்துவர்களுடன்அரபாத்

அரபாத்தின் நிலைக்குப் புதிய தலைவரை பலஸ்தீன மக்கள் ஏற்பார்களா? என்பதும் சந்தேகமே.

இவ்வாறான குழப்பகாரணமான சூழலில் அரசியல் அனாதையாக நிற்கும் பலஸ்தீனம் எதிர்காலத்தில் எவ்வாறு தம்மைக் கட்டிக்காக்கப் போகிறது.?

இது வரை காலமும் யசீர் அரபாத் கட்டிக்காத்த தனித்துவ பலஸ்தீனம் தொடர்ந்தும் நிலைக்க முடியுமா?

எனும் பல் வேறுபட்ட வினாக்களுக்கு விடைகளாக வேண்டிய நிலை ஒன்று தோன்றியிருக்கிறது.



அரபாத்தின் இழப்பால் துயருற்றிருக்கும் பலஸ்தீன இளைஞர்கள்

இவ் விடயங்களில் பலஸ்தீனத்தின் அரசியலில் ஆதிக்க சக்திகளின் தலையீடு இருக்கும் சாத்தியங்கள் நிறையவே இருக்கிறது. மத்திய கிழக்கில் தனித்துவ தலைவனாக இருந்த யசீர் அரபாத்தின் மரணம் பல நாடுகளுக்கு சந்தோசத்தை ஏற்படுத்தி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.



அமெரிக்க முன்னாள் சனாதிபதி பிள்கிளிங்டனுடன் அரபாத்

குறிப்பாக இஸ்ரேல் நாட்டிற்கும் அமெரிக்காவிற்கும் பெரும் மகிழ்ச்சியை தந்திருக்கும் விடயமாகவே யசீர் அரபாத்தின் மறைவு விளங்குகிறது.

மத்தியகிழக்கில் தன் ஆதிக்கத்தை வலுப்படுத்த இஸ்ரேலை அமெரிக்க பயன்படுத்திவரும் நிலையில் இதற்குச் சவாலாக விளங்கியவர் யசீர்அரபாத். 2002ஆம் ஆண்டு அரபாத்தைக்கொலை செய்யவேண்டும் எனப் பகிரங்கமாக அறிவித்தது இஸ்ரேல். இவ் இஸ்ரேலின் கூற்றை சிரியா நாடு எதிர்த்தது. "சர்வதேச நாடுகளின் அங்கீகாரம் பெற்ற ஒரு விடுதலைப் போராட்ட வீரனைக் கொலை செய்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. உடனடியாகவே அரபாத்தின் உயிருக்கு பாதுகாப்புத் தேவை எனும் தீர்மானத்தை" சிரியா ஐ.நாடுகள் பாதுகாப்புச் சபையிடம் கொண்டு சென்றது. இத் தீர்மானத்தை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி இரத்துச்செய்திருந்தது. இந்த ஒரு உதாரணம் மட்டுமே போதும் அமெரிக்காவின் பலஸ்தீனம் மீதான பார்வையைப் புரிந்து கொள்வதற்குப் போதுமானதாகும். இவற்றைக் கொண்டு

**முத்தையனூர் ப~துஸ்யந்தன்**

பலஸ்தீனத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும் எனப் பார்த்தால் தனித்துவ பலஸ்தீனத்தின் விடுதலைப் போராட்ட வரலாறு யசீர் அரபாத்தின் மறைவுடன் மேலும் சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர் கொள்ளப் போகின்றது எனத் துணிந்து கூறலாம் என்பதே பதிலாக அமைகிறது.

# நம்பிக்கை கொள்ள முடியாத நிலையில் சமாதானத்தின் எதிர்காலம்!

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகள் இயக்கத்தினருடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில்லை என்பதில் உறுதியாக உள்ளாரென்பது இன்று தெளிவாக ஊர்ஜிதப்படுத்தப்படும் ஒன்றாகியுள்ளது. சனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் ஆர்வமாகவுள்ளார்; அக்கறையுடன் உள்ளார் எனப் பலவாறு கூறிக்கொண்டாலும் அடிப்படையில் அவர் சமாதான முயற்சிகளில் ஆர்வமாக இல்லை என்பதே யதார்த்தமானதாகவுள்ளது.

அவ்வாறு இல்லை, சிறிலங்கா அரசு சமாதான முயற்சிகளில் ஆர்வமாகவுள்ளது, அக்கறையாகவுள்ளது என யாராவது கூறுவார்களேயானால் நிச்சயமாக அவர்கள் தமிழர் வினோதப்பாங்கு உடையவர்களாக மட்டுமே இருக்க முடியும். நீதியான செயற்பாடு கொண்டவர்களாக இருப்பதற்கு வாய்ப்பில்லை.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் இம்முறை இலங்கைக்கு விஜயம் செய்தபோது மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை. ஏனெனில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதில் உள்ள சிக்கல்களை அவர் ஓரளவு புரிந்துகொண்டே இருந்தார். இரு தரப்பிற்கும் இடையேயான இடைவெளியை சுலபத்தில் ஈடுசெய்துவிட முடியாது என்பது விளங்கப்பட்டதொன்றாகவே இருந்தது. ஆயினும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்படுவதற்கான சமிக்ஞைகளாவது தெரி கின்றதா? என்பதை இவ் விஜயத்தின் மூலம் அவர் அறிந்துகொள்ள முற்பட்டிருக்கக் கூடும்.

> நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் தலைமையிலான நோர்வே குழுவினரின் விஜயத்தின் முன்பும் சரி, பின்பும் சரி சமாதான முயற்சி தொடர்பாக அரசின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. சுருக்கமாகக் கூறுவதானால் சமாதான முயற்சிகளில் எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை என்பதே நிதர்சனமானதாகவுள்ளது.

அவ்வாறு இல்லாதுவிடில் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரின் இலங்கைக்கான விஜயம் அர்த்தமற்றது. இதனை ஒரு விடுமுறைக்கால பயணமாகவே கொள்ள வேண்டியதாக இருக்கும். ஆனால் தற்பொழுது ஜோன்பீற்றர்சனின் வருகை அர்த்தமற்றதாக முடிந்துள்ளது என்பதே உண்மை நிலையாகும்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் கொழும்பிற்கு வந்து சேர்ந்தபோது சனாதிபதி சந்திரிகாவிடம் இருந்து புதிதாக யோசனைகள் எவையும் கிடைக்கவில்லை. இது அவருக்குப் பெருத்த ஏமாற்றமாக இல்லாதுவிடினும் ஓரளவு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்க முடியும்.

இதேவேளை ஜோன்பீற்றர்சனின் வருகைக்கு முன்னதாக அரச கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களும் அரசிற்குச் சார்பான ஊடகங்களும் சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் தீவிர அக்கறை கொண்டுள்ளார். அவரிடம் புதிய திட்டங்கள் உள்ளன என்ற ரீதியில் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தன.

ஆனால் நோர்வே வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்த சனாதிபதி சந்திரிகா சமாதான முயற்சிகள் தொடர்பாகவோ- முடங்கிக்கிடக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது தொடர்பாகவோ ஆக்கபூர்வமாக எதையும் தெரிவிக்கவில்லை. இச்சந்திப்புத் தொடர்பாக சனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், "கிளிநொச்சி செல்லும் ஜோன் பீற்றர்சனிடம் சிறியதொரு செய்தியாகப் பேச்சுவார்த்தைக்கு புலிகளை வருமாறு தெரிவிக்கலாம்" என்பது மட்டுமே சனாதிபதியால் தெரிவிக்கப்பட்டதாக இருந்தது.

இந்நிலையில் ஜோன்பீற்றர்சனின் வன்னி விஜயத்தினால் சமாதானப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் எதுவும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அறவே அற்றதாக இருந்தது. ஆயினும் ஜோன் பீற்றர்சனின் வருகையின்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராயப்பட்டது.

இந்நிலையிலேயே விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கானதொரு யோசனையை சனாதிபதி சந்திரிகாவிடம் முன்வைப்பதற்கென ஜோன்பீற்றர்சன்னிடம் தெரிவித்திருந்தார். இதேவேளை நோர்வே வெளிவிவகார அமைச்சரின் வேண்டுகோளுக்கு இசைவாக- இவ்யோசனைகள் விடுதலைப்புலிகளினால் வெளியிடப்படவில்லை.

அத்தோடு, இவ் யோசனைகளை முன்வைத்து தான் நாடு திரும்புவதற்கு முன்பதாக விடுதலைப்புலிகளுக்கு அறிவித்துவிட்டுச் செல்வதாக ஜோன்பீற்றர்சன் உறுதி கூறிச்சென்றிருந்தார். ஆயினும் அவர் அன்றிரவே சனாதிபதியைச் சந்தித்தாராயினும் நாடு திரும்புவதற்கு முன்பதாக விடுதலைப்புலிகளுக்கு எத்தகைய தகவல்களையும் அனுப்பிவைக்காது சென்றார்.

அதாவது விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ அன்றி பரிசீலிக்கப்படுவதாகவோ கொள்வதற்கு எந்தவித சமிஞ்கைகளும் இல்லை. "இதேவேளை சனாதிபதி -நோர்வே வெளிவிவகார அமைச்சர் சந்திப்புக்குறித்து தகவல் அறிக்கை ஒன்றை வெளியிட்ட சனாதிபதி செயலகம், இலங்கை அரசாங்கம், நோர்வே அனுசரணையாளர்களுடன் மிகவும் நெருங்கிய வகையில் இணைந்து செயற்படத் தயாராகவுள்ளது'' எனத் தெரிவித்திருந்தது.

அதாவது விடுதலைப்புலிகள் தெரிவித்த யோசனைகள் பற்றியோ அன்றி அது குறித்த தமது நிலைப்பாடு குறித்தோ தகவல் எதுவும் வெளியிடவில்லை. தற்பொழுது வெளியாகும் தகவல்களின்படி கொழும்பில் தங்கியிருந்த நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனும், விசேடதூதுவர் எரிக் சூல்ஹெய்மும் அரச தரப்பினரிடம் இருந்து சாதகமான தகவல்கள் எவையும் கிடைக்கப்பெறாமையினால் நாடுதிரும்பத் தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

அதாவது நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்சன் தலைமையிலான நோர்வே குழுவினரின் விஜயத்தின் முன்பும் சரி, பின்பும் சரி சமாதான முயற்சி தொடர்பாக அரசின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. சுருக்கமாகக் கூறுவதானால் சமாதான முயற்சிகளில் எத்தகைய மாற்றங்களும் ஏற்படவில்லை என்பதே நிதர்சனமாகவுள்ளது.

ஜோன்பீற்றர்சன் கொழும்பிற்குப் புறப்படும் முன்பதாகவே பெரிய மாற்றங்கள் எதுவும் எதிர்பார்க்கவில்லையாயினும், முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராய்வது அவரின் விஜயத்தின் நோக்கங்களில் ஒன்றாகியது. ஆனால் அவரின் சந்திப்புக்களின் பின் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு உதவி வழங்குவதற்காக ஐந்துவருடங்கள் தானும் காத்திருக்கத் தயாராக இருப்பதாகக் கூறமுடிந்துள்ளதே தவிர சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து நம்பிக்கையூட்டும் வகையில் எதையும் பேசமுடியாது போய்விட்டது என்பதே உண்மையாகும்.



சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப்பொறுத்து அவர் தற்பொழுது பேச்சுவார்த்தைகள் எதையும் ஆரம்பிப்பதற்குத் தயாராக இல்லை என்பதே நிதர்சனமானதாகும். இதற்கு ஒன்றோ அன்றி இரண்டோ காரணம் என வரையறுத்துக் கூறிவிட முடியாது.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் எவருமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காணச்செய்வார்களா என்பது கேள்விக்குரியதே. சிலவேளைகளில் சமாதான முயற்கிகளைப்பற்றி அவர்கள் பேசினாலும் கூட அவை நிர்ப்பந்தத்தின் பாற்பட்டவையாக இருக்குமேயொழிய ஒருபோதும் உளப்பூர்வமாக இருக்க மாட்டாது.

சனாதிபதி சந்திரிகா இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல்தீர்வு காணவிருப்பம் கொண்டிருப்பாரேயானால் 1994இல் அவர் பதவிக்கு வந்தபோதே கண்டிருக்க முடியும். அன்று சமாதானத்தை உருவாக்குவதற்கு காணப்பட்ட அரசியல் சூழ்நிலை போன்றதாகப் பின்னர் எப்பொழுதுமே காணப்படவில்லை. ஆனால் சனாதிபதி சந்திரிகா அவ்வாறு செய்யவில்லை. புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்கவே விரும்பினர். தமிழ் மக்கள் மீது தீர்வொன்றைத் திணிக்கவே விரும்பினார்.

இந்நிலையை அவர் தற்பொழுதும் மாற்றிக் கொண்டதாக இல்லை. அது மட்டுமல்ல, ஐ.தே. முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளைத் தடுத்து நிறுத்திய சனாதிபதி சந்திரிகாவின் பேச்சுவார்த்தையானது தனது இஷ்டத்திற்கும், விருப்பிற்கும் ஏற்றவகையிலும் இடம்பெற வேண்டும் என்ற எண்ணப்பாட்டுடன் செயற்படுபவராகவே உள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமாதான முயற்சிகளை முன்னெடுக்காமல் இருப்பதற்கு அரசாங்கத்தின் முக்கிய கூட்டாளியான ஜே.வி.பி.யின் சமாதான முயற்சிகளை எதிர்ப்பதே காரணம் என்ற கருத்தும் பரவலாக உண்டு. ஆனால் இது ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு வாதமாக இருக்கமாட்டாது. ஏனெனில் ஜே.வி.பி.யினர் இன்று முன்னர் போன்று இல்லை. பாராளுமன்ற அரசியலுக்காகத் தம்மை வெகுவாகவே மாற்றிக்கொண்டுள்ளனர்.

சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால் இவர்கள் அமைச்சுப்பதவிகளுக்காகப் பேரம்பேசும் மட்டத்திற்கு இறங்கிவந்துள்ளனர். இந்நிலையில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதற்காக ஆட்சியைக் கவிழ்த்து, அதிகாரத்தை இழந்து எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து விடுவார்கள் என எதிர்பார்ப்பதற்கு இல்லை.

அடிப்படையில் சனாதிபதி சந்திரிகாவும் சரி, வேறு ஆட்சியில் இருந்த, ஆட்சியில் இருக்க விரும்புகின்ற சிங்கள அரசியல்வாதிகள் எவருமே தமிழ் மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்குத் தயாராக இல்லை. இதற்கு அவர்களின் மனங்களில் உள்ள வரலாற்று ரீதியான அடிப்படை அம்சமே காரணமாகும்.

அதாவது தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் தனிநாடு ஒன்று உருவாவதற்கு வழிசமைத்து விடுமோ என்ற அச்சமே ஆகும். இது வரலாற்று ரீதியிலான அச்சமாகும். ஏனெனில் இலங்கைத்தீவானது ஐரோப்பியர் வருகைக்கு முன்பாக என்றுமே ஒன்றுபட்ட நாடாக இருந்ததில்லை.

இவ் வரலாற்று ரீதியிலான உண்மை காரணமாக எப்பொழுது தமிழர் தனிநாடாகப் பிரிந்து சென்றுவிடுவார்களோ என்ற அச்சப்பாடு அவர்களுக்கு இருந்தே வருகின்றது. அதாவது தமிழரின் போராட்டத்திற்கான நியாயப்பாடும், வரலாறும் தமிழருக்கென தனிஅரசு ஒன்று உருவாக்கி விடுமோ என்ற ஐயப்பாட்டை அவர்களுக்கு உருவாக்குவதாகவே உள்ளது.

இந்நிலையில்தான் இராணுவப்பலம் கொண்டு எவ்வாறேனும் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்துவிடவும், தமிழரின் போராடும் சக்தியை இல்லாது ஒழித்துவிடுவதுமே அவர்களின் நீண்டகால இலக்காகும்.

இவர்கள் சமாதான முயற்சிகளை மேற்கொள்வதும், யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்க முற்படுவதும் நிர்ப்பந்தத்தின் பாற்பட்டதாகும். தற்பொழுது அவர்களின் நிலையில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதாவது சிறிலங்கா இராணுவம் தோல்விகளை மறக்கத் தொடங்கியுள்ள அதேவேளை ஆட்சியாளர்களும் இராணுவத்தைப் பலப்படுத்த முற்பட்டு நிற்கின்றனர்.

சிங்கள ஆட்சியாளர்களைப் பொறுத்து அவர்களின் மனங்களில் நிறைந்துள்ள இனவெறி வரலாற்று ரீதியில் தமிழரின் மீதான அச்சம் என்பன நவீன அரசியற் சித்தாந்தங்களுக்கு உட்பட்டதாக இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்க அனுமதிப்பதாக இல்லை. இந்நிலையில் சிங்கள ஆட்சியாளர்களால் சமாதானம் குறித்துப் பேசப்படுவது காலத்தின் நிர்ப்பந்தமே ஒழிய அரசியல்தீர்வின் அவசியம் கருதியதானதாக இல்லை. □

ஜெயராஜ்

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

## நிவாரணம் புனர்வாழ்வு மற்றும் மீளிணக்கத்துக்கான அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் புழுங்கல் அரிசி வழங்கலுக்கான கேள்வி கோரல்

01. யாழ்.மாவட்டத்தில் இலவச நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான 2004 செப்ரெம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான நிவாரணம் வழங்குவதற்குத் தேவையான அரிசியை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களுக்கென எதிராக குறிப்பிடப்பட்டுள்ள அளவுகளில் நேரடியாக விநியோகிப்பதற்கான கேள்விகள் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களிடம் (வரைவுள்ளது) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கத்திற்கும் வழங்கப்பட வேண்டிய தொகை கீழே குறிப்பிடப்பட்டுள்ளதுடன், இவைகளில் அளவு மாற்றங்கள் ஏற்படுமிடத்து அவை அவ்வப்போது அறிவிக்கப்படும்.

| இல | ப.நோ.கூ.சங்கம் | அரிசியின் அளவு (MT) | | | |
|---|---|---|---|---|---|
| | | 2004 செப்ரெம்பர் | 2004 ஒக்ரோபர் | 2004 நவம்பர் | 2004 டிசம்பர் |
| 01 | சாவகச்சேரி | 95 | 95 | 95 | 95 |
| 02 | கைதடி | 35 | 35 | 35 | 35 |
| 03 | கொடிகாமம் | 68 | 68 | 68 | 68 |
| 04 | உடுப்பிட்டி | 16 | 16 | 16 | 16 |
| 05 | கட்டைவேலி, நெல்லியடி | 22 | 22 | 22 | 22 |
| 06 | பருத்தித்துறை | 57 | 57 | 57 | 57 |
| 07 | புலோலி | 13 | 13 | 13 | 13 |
| 08 | மருதங்கேணி | 40 | 40 | 40 | 40 |
| 09 | யாழ்ப்பாணம் | 156 | 156 | 156 | 156 |
| 10 | நல்லூர் | 80 | 80 | 80 | 80 |
| 11 | அச்சுவேலி | 77 | 77 | 77 | 77 |
| 12 | நீர்வேலி | 58 | 58 | 58 | 58 |
| 13 | மானிப்பாய் | 66 | 66 | 66 | 66 |
| 14 | பண்டத்தரிப்பு | 45 | 45 | 45 | 45 |
| 15 | அளவெட்டி, மல்லாகம் | 32 | 32 | 32 | 32 |
| 16 | தெல்லிப்பளை | 75 | 75 | 75 | 75 |
| 17 | சங்கானை | 91 | 91 | 91 | 91 |
| 18 | சுன்னாகம் | 98 | 98 | 98 | 98 |
| 19 | புங்குடுதீவு, நயினாதீவு | 20 | 20 | 20 | 20 |
| 20 | வேலணை | 22 | 22 | 22 | 22 |
| 21 | ஊர்காவற்றுறை | 35 | 35 | 35 | 35 |
| 22 | காரைநகர் | 28 | 28 | 28 | 28 |
| 23 | தீவகம் | 06 | 06 | 06 | 06 |
| 24 | நெடுந்தீவு | 15 | 15 | 15 | 15 |
| | மொத்தம் | 1250 | 1250 | 1250 | 1250 |

02. கேள்விப் பத்திரத்தில் கோரப்பட்ட முழுத் தொகையையோ அல்லது பகுதியையோ கொள்வனவு செய்வதென்பது தேவைக்கு ஏற்ப அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும்.

03. கேள்விகளைச் சமர்ப்பிக்க விரும்பும் ப.நோ.கூ.சங்கங்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூ.500 ஐ யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2004.11.15 ஆம் திகதி தொடக்கம் 2004.11.29 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் முற்பகல் 10.00 மணி தொடக்கம் பி.ப.3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். இவ்வசதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட ப.நோ.கூ. சங்கங்களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாவட்ட அரசாங்க அதிபரினுடைய அலுவலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

04. மீளளிக்க முடியாத கேள்வி வைப்புகளாக ரூபா 500 ஐ அந்தந்த மாவட்ட செயலகத்தில் செலுத்தி அரசாங்க அதிபரிடமிருந்து கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

05. கேள்வி கோரப்படவுள்ள அரிசி புழுங்கல் அரிசியாக இருத்தல் வேண்டும். என்பதுடன், அவை கேள்வி பற்றிய ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளைக் கொண்டிருத்தல் கட்டாயமானதாகும்.

06. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவங்களை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டசெயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர்,யாழ்ப்பாணம். என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ/ தபால் மூலமாகவோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலக (கணக்காளரது) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் 29.11.2004 பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்த்தல் வேண்டும். அன்றைய தினம் பி.ப 03.00 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விகாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

07. கேள்விப் பத்திரத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல்மூலையில் "புழுங்கல் அரிசி வழங்குவதற்கான கேள்வி"என எழுதப்படல் வேண்டும்.

08. கேள்விகாரர்கள் (Bidders) குறிப்பிடப்பட்ட ப.நோ.கூ.சங்கங்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைக்கு தமது கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கும் அச் சங்களுக்கு விநியோகிப்பதற்கான வெவ்வேறான விலைகளை குறிப்பிடுவதற்கும் அருகதையுடையவர்களாவர். ஒவ்வொரு ப.நோ.கூ. சங்கங்களுக்கும் விநியோகிக்கப்பட வேண்டிய அரிசியின் தொகை வெவ்வேறான கேள்விகளாகக் கருதப்படும்.

09. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயற்படுதல் முறிக்காக (Berformance Bond) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ளல் வேண்டும்.

10. கேள்விகள் பரிசீலனை செய்யப்படும் பொழுது சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளின் விநியோகத்திற்கான விலை, மாவட்ட விலை நிர்ணய சபையினால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும், அதிகமாக இருத்தல் கூடாது. மாவட்ட விலை நிர்ணயம் செய்யப்படும்பொழுது விநியோக விலை சந்தை விலையிலும் பார்க்க எக் காரணம் கொண்டும் அதிகமாக இருக்கமாட்டாது.

11. கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து கேள்விகள் 30 நாட்களுக்குள் வலுவுடையதாக இருக்கும்.

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்,**
**மாவட்ட கேள்விச்சபை/மாவட்டச்செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(சி-10613)

# புத்தளத்தில் இருதரப்பினரிடையே மோதல் பொலிசாரின் தாக்குதலில் 14பேர் காயம்!

புத்தளத்தில் அரச மற்றும் தனியார் போக்குவரத்து துறையினருக்கிடையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட றப்பர் குண்டு பிரயோகத்தில் 14பேர் காயமடைந்துள்ளார்கள்.

குருநாகல் - புத்தளம் வீதியில் பேருந்துப் போக்குவரத்து தொடர்பாக இரு தரப்பினருக்குமிடையில் கடந்த ஓரிரு நாட்களாக நிலவி வந்த முறுகல் நிலை நேற்றுமுன்தினம் மாலை வன்முறையாக வெடித்தது. புத்தளம் இ.போ.ச. டிப்போவிலிருந்து 3 பேருந்துகளில் வந்த ஊழியர்கள் பேருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த தனியார் பேருந்துக்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு ஊழியர்களையும் தாக்கியுள்ளார்கள்.

இந்தச் சம்பவத்தில் 5 தனியார் பேருந்துக்கள் சேதமடைந்துள்ளதோடு 6பேர் காயமடைந்துள்ளார்கள். இதனையடுத்து இரு தரப்பினருக்குமிடையில் ஏற்பட்ட வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்காக பொலிசார் கண்ணீர் புகை மற்றும் றப்பர் குண்டு பிரயோகம் மேற்கொண்டதோடு தடியடிப் பிரயோகமும் செய்துள்ளனர்.

# தனியார் மயப்படுத்த முடிவு

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை அரசாங்கம் தனியார் துறையிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன. இதற்கு எதிராக தொழிற்சங்கங்கள் பெரும் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்போவதாக அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளன.


## வன்னி மண்ணில் வளமான தரமான சேவைகள்

சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மூலப்பொருட்களைக் கொண்டு முற்றிலும் கணினி வடிவமைப்புடன் பல வர்ணங்களைப் பாவித்து நீண்ட காலப் பாவனையை உறுதிப்படுத்தி துணிவகைகளில் பிறிண்டிங் செய்து பெற்றுக் கொள்ளலாம்

எம்மிடம்:- பெனர்கள் (5 மீற்றர், 4 மீற்றர்,3 மீற்றர்,2 மீற்றர் அளவிலானவைகளையும்) வாகனக் கொடிகள், பாடசாலைக் கொடிகள்,ரைகள், ரீசேட்,தொப்பி போன்றவற்றில் எம்போசிங் பிறிண்டிங், கோல்ட் பிறிண்டிங் என்பவற்றையும் போட் வேலைகளையும் ஸ்ரிக்கரில் டிஜிற்றல் போட் வடிவமைப்புக்களையும்,சித்திர வேலைப்பாடுகளையும்,உயர் ரக பொலிமர் றபர் ஸ்ராம் என்பவவற்றையும் செய்து வழங்குகின்றோம்.

தொடர்புகளுக்கு:- **உயிரோடை பதிப்பகம்**
யாழ் சாலை, கிளிநொச்சி.

(5273)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கந்தையா நீலாம்பரம்

அமரர் கந்தையா நீலாம்பரம் உணாப்பிலவு– முல்லைத்தீவு முன்னாள் மலேரியாத் தடைப்பகுதி தெளிகருவி இயக்குனராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுக் கொழும்பில் வசித்துக் காலமானார். இவருக்கு நாம் எமது இதயபூர்வமான எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் பிரிவுத் துயரில் மூழ்கியிருக்கும் மனைவி, பிள்ளைகள், உறவினர்களுக்கு எங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிராந்திய வைத்திய அதிகாரி (மலேரியா தடைப்பகுதி)
வெளிக்கள உத்தியோகத்தர்கள்,
தெளிகருவி இயக்குனர்கள் முல்லைத்தீவு.

(சி-10513)

## இரண்டாம் ஆண்டு நினைவு தினம்

தோற்றம்
22
04
1935



தோற்றம்
06
11
2002

### திருமதி முத்துசாமி செல்வபாக்கியம்

யாழ். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும்
யாழ். காங்கேசன்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும்
முல். புதுக்குடியிருப்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட

குணமெனும் குன்றேறி கோதையே எங்கள்
மணமெங்கும் நீ நிறைந்து வாழ்வாயென்றும்
உணவூட்டி, உரமூட்டி உறவுக்குள் ஒன்றாய்
மணம் வீசி நின்றவனே மகிமை பெற்றாய்

ஆதவன் இல்லம்,
சிறி முத்துமாரியம்மன் கோவிலடி,
2 ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

அன்புக்கணவர்
முத்துசாமி

(5269)

# காசோலை மோசடி குறித்து சரணடைய மத்திய மந்திரி தஸ்லிமுதீனுக்கு நீதிமன்று உத்தரவு

(பாட்னா)

காசோலை மோசடி வழக்கில் மத்திய மந்திரி தஸ்லிமுதீன் சரணடைய நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மத்தியபொது விநியோகத் துறை மந்திரி தஸ்லிமுதீன் லல்லுப் பிரசாத்தின் ராஷ்டிரீய ஜனதாதளம் கட்சியைச் சேர்ந்த இவர் மீது ஏற்கனவே ஒரு கிரிமினல் வழக்கு உள்ளது.

மேலும் அவர் மீது காசோலை மோசடி வழக்கு ஒன்றும் தொடரப்பட்டு உள்ளது. ஒரு கம்பெனியில் வாகனத்தை வாங்கிவிட்டு அதற்காக தஸ்லிமுதீன் கொடுத்த ரூ.2 இலட்சத்து 42 ஆயிரத்திற்கான காசோலை வங்கியில் பணம் இல்லாமல் திரும்பிவந்து விட்டதால் அவர் மீது இந்த வழக்கு தொடரப்பட்டது.

பாட்னாவில் உள்ள மாவட்ட செசன்சு நீதிமன்று இந்த வழக்கில் தஸ்லி முதீனுக்கு முதலில் ஜாமீனில் வெளிவர முடியாத கைது பிடியாணை பிறப்பித்தது.

பின்னர் இந்த வழக்கில் தஸ்லி முதீனுக்கு முன்ஜாமீன் வழங்கிய மாவட்ட நீதிமன்ற கோர்ட்டு நீதிபதி ஷியாகிஷோர் சர்மா, 20 நாட்களுக்குள் கீழ் நீதிமன்றில் சரணடையுமாறு அவருக்கு உத்தரவிட்டு இருக்கிறார்.

அதன்பின்பு தஸ்லிமுதீன் நிரந்தர ஜாமீன் கேட்டு அந்த நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யலாம் என்றும் நீதிபதி கூறியுள்ளார்.

# ஹுரியத் இயக்கத்தலைவர் ஸ்ரீநகரில் வீட்டுக்காவலில்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் ஹுரியத் தலைவர் கிலானி பொலிசாரால் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார்.

காஷ்மீர் மாநிலம் ஹேண்ட்வார்நகரில் ஒரு பெண்ணும், அவரது மகளும் இராணுவ அதிகாரியால் கடந்த 7ஆம் திகதி பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேஜர் ரகிமான் உசேன் என்பவர் 'சஸ்பெண்டு' செய்யப்பட்டுள்ளார்.

இந்த பாலியல் வல்லுறவுச் சம்பவத்தைக் கண்டித்து ஹுரியத் இயக்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது ஸ்ரீநகரிலுள்ள மசூதி முன்பு இந்த ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்றும் அதில் ஹுரியத் தலைவர் சயீத் அலிஷா கிலானி கலந்து கொள்வார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து ஹுரியத் தலைவர் கிலானி நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்யப்பட்டார். ஹைதர்புரா பகுதியில் உள்ள அவரது வீட்டிலேயே காவலில் வைக்கப்பட்டார்.

தடை உத்தரவு அமலில் இருப்பதால் கிலானி முன் எச்சரிக்கை நடவடிக்கையாக கைதுசெய்யப்பட்டு இருப்பதாகப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். கிலானியுடன் அவரது ஆதரவாளார்கள் 12பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிலானி கைது செய்யப்பட்டதாக பொலிசார் கூறியதும் 50இற்கும் மேற்பட்டவர்கள் வீட்டிற்கு முன்பு திரண்டு நின்று காஷ்மீர்அரசுக்கு எதிராக கோஷங்களை முழங்கினார்கள். கிலானியுடன் கைது செய்யப்பட்டவர்களில் தேசிய முன்னணித் தலைவர் நயீன் அகமதுகான் என்பவரும் அடங்குவர்.

# காஞ்சிபுரம் கோவில் நிர்வாகியின் கொலை வழக்கு விசாரணையில் புதிய திருப்பம்

காஞ்சிபுரம் கோவில் நிர்வாகி கொலை வழக்கில் கூலிப்படைக்கு ரூ50 இலட்சம் கொடுக்கப்பட்டு இருக்கலாம் என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோவில் முகாமையாளர் சங்கரராமன் கடந்த செபரெம்பர் மாதம் கோவில் அலுவலகத்தில் கூலிப்படையால் கொலை செய்யப்பட்டார். இந்தக் கொலை வழக்கில் காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் முக்கிய குற்றவாளியாக குற்றம் சுமத்தப்பட்டுக் கைதான சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சங்கரராமன் கொலை பற்றி கடந்த 2 மாதங்களாக பொலிஸ் தனிப்படை துருவித் துருவி விசாரணை நடத்தியதில் பல முக்கிய தடங்கள் பொலிசில் சிக்கின. அவற்றில் குறிப்பிடத்தக்கது. கூலிப்படைக் கும்பலுக்கு கொடுக்கப்பட்ட பணமாகும்.

சங்கரராமனை தீர்த்துக்கட்டும் பணிக்கு, சென்னை கூலிப் படையினருக்கு ரூ.10 இலட்சம் முதல் ரூ.50 இலட்சம் வரை கூலியாகக் கொடுக்கப்பட்டு இருக்கலாம் என்று பொலிசாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

ரூ.2இலட்சம் ரொக்கப்பணம் கூலிப்படையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. ரூ.7லட்சம் கைமாறியதற்கான ஆவணங்களும் பொலிசாரிடம் சிக்கியது. இந்தச் சூழ்நிலையில், ஜெயேந்திரர் 'அதிரடி'யாகக் கைது செய்யப்பட்டுள்ளார்.



காஞ்சி மடாதிபதி ஜெயேந்திரர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்படுகிறார்.

# பாக். கடல் பகுதியில் 29 இந்திய மீனவர்கள் கைது

(புதுடில்லி)

பாகிஸ்தான் கடற்பகுதியில் சட்ட விரோதமாக மீன்பிடித்ததாக 29 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடலோரக்காவல் படையினர் வியாழக்கிழமை கைது செய்தனர். இவர்களின் கைது குறித்து இந்திய அதிகாரிகள் மேல் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

# ஹுரியத்தலைவர் கிலானி மன்மோகன் சிங்குக்குக் கண்டனம்

"காஷ்மீர் மாநிலத்தில் இருந்து இராணுவம் குறைக்கப்படும் என்ற பிரதமர் மன்மோகன்சிங்கின் அறிவிப்பு பெரிய தமாஷ் ஆகும். என ஹுரியத் இயக்கத் தலைவர் கிலாறி பொலிசாரால் கைது செய்யப்பட்டபின் தெரிவித்துள்ளார்.

ஒரு புறம் இந்த அரசாங்கம் காஷ்மீரில் இயல்பு வாழ்கை திரும்புகிறது. எனவே இராணுவத்தை குறைக்கிறோம் என்கிறார்கள். இன்னொரு புறத்தில் வீட்டுக்காவலில் அடைத்து மத உரிமையை பறிக்கிறார்கள். இது பெரிய முரண்பாடாக இருக்கிறது.

பிரதமர் மன்மோகன் சிங்கின் அறிவிப்பு "ஈத் பெருநாள் பரிசு" என்று காஷ்மீர் முதல் மந்திரி முப்தி முகமது சயீத் கூறி இருப்பதாகவும் கிலானி எதிர்ப்புத் தெரிவித்தார். இது பற்றி அவர் கூறுகையில், "பெண்கள் பாலியல்வல்லுறவிற்குட் படுத்தப்படுகிறார்கள் இளைஞர்கள் சிறையில் அடைக்கப்பட்டுக் காவலில் இருக்கும் போது கொல்லப்படுகிறார்கள். இந்த நிலையில் சிலர் இது ஈத் பெருநாள் பரிசு என்று கூறுவதை நினைத்துதான் அவர்கள் மீது பரிதாபப்படுகிறேன்" என அவர் மேலும் கூறியுள்ளார்.

# பா.ஜ.பிரமுகர் கொலைகுறித்து கைதான நால்வருக்கு தூக்குத் தண்டனை

(பாலக்காடு)

பா.ஜ.க. பிரமுகர் கொலையில் கைதான 4 பேருக்கு தூக்குத் தண்டனை விதித்த கோழிக்கோடு நீதிமன்று தீர்ப்பு வழங்கியது. பா.ஜ.க.பிரமுகர் கேரள மாநிலம் கோழிக்கோடு அடுத்த கண்ணூர், பன்னூர் என்ற இடத்தைச் சேர்ந்த சந்திரன், அந்த பகுதி பா.ஜ.க தலைவர் இவரை கடந்த 1996 ஆம் ஆண்டு முன்விரோதம் காரணமாக சிலர் அரிவாளால் வெட்டிப் படுகொலை செய்தனர்.இது பற்றி பன்னூர் பொலிசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினார். இதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்த சுரேந்திரன், பிரேமன், புருஷோத்தமன், பாபு ஆகிய 4 பேர் பிடிபட்டனர்.

இவர்கள் மீதான வழக்கு கோழிக்கோடு சிவில்-கிரிமினல் நீதிமன்றில் நடந்து வந்தது. இதன் இறுதி விசாரணை கடந்த திங்கட்கிழமை நடந்தது. அன்றைய தினம், தீர்ப்பு வெள்ளிக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதன் படி நேற்று முன்தினம் தீர்ப்பு கூறப்பட்டது. பரபரப்பான இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட 4 பேருக்கு தூக்கு தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்புக் கூறினார்.

கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வந்த இந்த வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தீர்ப்புக் கூறப்படுவதை தொடர்ந்து நீதிமன்ற பகுதியில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

## கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் வட்டக்கச்சி (வ/து)
## கிளைக்குழுத் தேர்தல் – 2004
# அறிவித்தல்

வடக்குகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடக்கு கிழக்கு) அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் 1998.05.19ஆம் திகதி 1028/06 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடகிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக்குழுக்களை தெரிவு செய்வதற்கான விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக்கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக ஒழுங்குகள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கிளிநொச்சி அவர்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**காலம் :- 2004.11.20 திகதி சனிக்கிழமை**

**நேரம் :- மு.ப.9.30 மணி**

| தொ.இல. | கிளை. இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 01 | வட்டக்கச்சி மத்தி | தலைமைக்காரியாலய மண்டபம், கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் வட்டக்கச்சி |
| 02. | 02. | வட்டக்கச்சி மேற்கு | வட்டக்கச்சி தெற்கு அ.த.க.பாடசாலை மண்டபம் |
| 03. | 03. | வட்டக்கச்சி கிழக்கு | பிரபா முன்பள்ளி, ஆறுமுகம்வீதி, வட்டக்கச்சி. |
| 04. | 04. | மாயவனூர்க்கிளை | மாயவனூர் பாடசாலை. |
| 05. | 05. | மாவழிஅம்மன் கிளை | அறிவொளி சனசமூக நிலைய மண்டபம். |
| 06. | 06. | இராமநாதபுரம் மத்தி | இராமநாதபுரம் மகாவித்தியாலயம். |
| 07. | 07. | இராமநாதபுரம் தெற்கு | இராமநாதபுரம் சங்க அரிசியாலைக்கட்டடம். |
| 08. | 08. | இராமநாதபுரம் கிழக்கு | கிளைக்கட்டடம், இராமநாதபுரம் கிழக்குகிளை. |

முக்கிய குறிப்புக்கள்:-

01. வாக்களிக்கத் தகுதியுள்ள அங்கத்தவர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்படவில்லை. இந்த அறிவித்தலை சொந்த அறிவித்தலாகத் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.
02. இது சம்பந்தமான மேலதிக தகவல்களை கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

பொதுச் செயலாளர்,
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
வட்டக்கச்சி.

(சி-10611)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## திரு.சுப்பையா சதாசிவம்

(சம்புவெளி ஐயனார் பூசகர்)

தோற்றம் 20.12.1928
மறைவு 16.10.2004

15.11.2004 திங்கட்கிழமை மு.ப.10.00மணிக்கு அன்னாரது அந்தியேட்டிக் கிரியையும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிராத்தனையிலும் ,மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொன்னாவெளி,
வேரவில்,
பூநகரி.

(5275)

தகவல்:-
குடும்பத்தினர்,
(பேரன்)ரகு
சி. நிலவன்.

## தென்னாபிரிக்க அணி இந்தியா விஜயம் முதலாவது டெஸ்ட் வரும் 20ஆம் திகதி




சிமித் தலைமையிலான தென் ஆபிரிக்க கிரிக்கெட் அணி 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதற்காக நேற்று முன்தினம் இந்தியா வந்தது.

இந்தியா-தென்ஆபிரிக்கா அணிகளுக்கிடையே யான முதல் டெஸ்ட் போட்டி வருகிற 20 ஆம் திகதி கான்பூரில் தொடங்குகிறது 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நவம்பர் 28ஆம் திகதி முதல் டிசம்பர் 2-ஆம் திகதி வரை கொல்கத்தாவில் நடக்கவுள்ளது.

## பவள விழா சிறப்பு ஒரு நாள் போட்டி


# பாக். அணிக்கு 6 விக்கெட் வெற்றி



இந்திய-பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற சிறப்பு ஒருநாள் போட்டியில் பாகிஸ்தான் அணி 6விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

கொல்கத்தா ஈடன் ஹாடன் மைதானத்தில் பகல் இரவாக நடைபெற்ற மேற்படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் கங்குலி தாங்களே முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

இதன் படி முதலில் களமிறங்கிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 292 ஓட்டங்களைப் பெற்றது.



துடுப்பாட்டத்தில் அதிகூடிய ஓட்டங்களாக யுவராஜ்சிங் 78 ஓட்டங்களையும், சேவாக் 53 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 43, கங்குலி 48 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் அப்ரிடி 2 விக்கெட்டுக்களையும் அக்தர், ஹசன், ரசாக் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 293 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சல்மான் வட், அணித்தலைவர் இன்சமாம் உல்-ஹக் ஆகியோரின் சிறப்பு துடுப்பாட்டத்தின் மூலம் 49 ஆவது ஓவர் நிறைவில் வெற்றி இலக்கை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் சல்மான்பட் ஆட்டமிழக்காது 108 ஓட்டங்களையும், இன்சமாம் உல்-ஹக் 75 ஓட்டங்களையும், சொஹைப் மாலிக் 61 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில சகீர்ஹான், சேவாக் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் நெய்ரா 2 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக்காரராக சல்மான்பட் தெரிவானார்.

இவ்வெற்றி மூலம் பாகிஸ்தான் அணி பன்னிரெண்டு இலட்சம் பணப்பரிசை பெற்றுக்கொண்டது. இத்தோல்வி இந்தியா பாகிஸ்தானுக்கு எதிராக தொடர்ச்சியாக பெற்ற நான்காவது தோல்வியாகும்.

இப்போட்டியை 90.000 ரசிகர்கள் கண்டுகளித்ததும் குறிப்பிடத்தக்கது.

## குடி போதையில் கார் ஓட்டுபவன் முட்டாள் பெல்ப்ஸ் மீது பாய்கிறார் தோர்ப்

குடிபோதையில் கார் ஓட்டிய அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் பெல்ப்சை 'முட்டாள்' என்று மறைமுகமாக விமர்சித்துள்ளார் அவுஸ்திரேலிய வீரர் இயான் தோர்ப்.

அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல நட்சத்திர நீச்சல் வீரர் மைக்கேல் பெல்ப்ஸ். இவர் நடந்து முடிந்த எதென்ஸ் ஒலிம்பிக்கில் 6 தங்கம் உட்பட 8 பதக்கங்களை வென்றவர். 19வயதான இவர் சில நாட்களுக்குப் முன்பு அமெரிக்காவில் உள்ள சாலிஸ்பரி பகுதியில் குடித்து விட்டு கார் ஓட்டிச் சென்றார். சிக்னலில் கூட நிற்காமல் இவரது கார் பறந்து சென்றது. போக்குவரத்து பொலிசார் இவரது காரை நிறுத்தி சோதனையிட்ட போது, பெல்ப்ஸ் மது அருந்தியிருப்பதாகத் தெரிய வந்தது. மேலும், சம்பந்தப்பட்ட இடத்தில் 21 வயது நிரம்பியவரே மது அருந்த அனுமதி உண்டு. இதனாலும் போக்குவரத்து விதிகளை மதிக்காததாலும் இவரை பொலிசார் கைது செய்தனர். பின்னர் இந்த செயலுக்காக தான் மனம் வருந்துவதாகவும், மன்னித்து விடும்படியும் பெல்ப்ஸ் தெரிவித்திருந்தார்.



சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் எதிரியை பழி வாங்கலாம் என காத்திருந்தார். இவரது நீச்சல் எதிரி இயான் தோர்ப் அவுஸ்திரேலியாவின் முன்னணி நீச்சல் வீரரான இவர் நேற்று முன்தினம் நிருபர்களிடம் பேசுகையில் "பெல்ப்ஸ்" பற்றிய விபரங்கள் எனக்கு முழுமையாக தெரியாது. என்னை பொறுத்தவரை குடித்து விட்டு யார் கார் ஓட்டினாலும் அவரை முட்டாள் என்று தான் சொல்வேன். அவுஸ்திரேலிய இளைஞர்கள் யாரும் குடித்துவிட்டு கார் ஓட்டுவதில்லை.நடந்த தவறுக்காக பெல்ப்ஸ் மன்னிப்பு கேட்டதாக கேள்விப்பட்டேன். இந்தச் சம்பவம் உண்மையிலேயே வருந்தத்தக்க தொன்று என்றார்.

## அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் ஸ்டீபன் பிளெமிங் பங்கேற்பார்



அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணித்தலைவர் ஸ்டீபன் பிளெமிங் பங்கேற்பது உறுதியாகிவிட்டது.

நியூசிலாந்து அணி தற்போது அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளது. இரு அணிகளும் 2டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் மோதவுள்ளன. முதல் டெஸ்ட் வரும் 18ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகின்றது.

இந்தத் தொடரில் நியூசிலாந்து அணித்தலைவர் ஸ்டீபன்பிளெமிங் பங்கேற்பது சந்தேகமாக இருந்தது. இவர் வங்கதேச சுற்றுப்பயணத்தின் போது வைரஸ் காய்ச்சலால் அவதிப்பட்டார். தற்போது குணமடைந்துள்ள இவரை நேற்று முன்தினம் டாக்டர்கள் பரிசோதனை செய்தனர். சோதனையில் உடல் நலம் தேறியிருப்பது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா செல்லும் பிளெமிங் முதல் டெஸ்டில் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுன்றது.

## மேசைப்பந்து போட்டியில் இந்தியா செல்வதற்கு யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு வீரர்கள் தெரிவு

வடக்கு கிழக்கு மாகாண ரீதியாக இந்தியா செல்வதற்காக இடம் பெற்ற மேசைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் திருகோணமலையில் இடம்பெற்ற இப் போட்டியில் வடக்கு கிழக்கு மாவட்டங்களில் இருந்து சென்ற அணிகளுக்கு இடையே இப் போட்டிகள் இடம்பெற்றன.

ஆண்கள் பிரிவில், 15 வயதுப் பிரிவில் ஆ. நிதர்சனும் திறந்த போட்டியில் கே.மோகனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெண்கள் பிரிவு ஆட்டத்தில் 13 வயதுப் பிரிவில் எஸ்.சரண்ஜாவும், 19 வயதுப் பிரிவில் எ.நிருஷ்யாவும், திறந்த போட்டியில் ப.பானுரேகா, ஆர்.கஜந்தினி ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் வெகு விரைவில் இந்தியாவில் இடம்பெறவுள்ள மேசைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் (41).

## தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு வவுனியாவில் விளையாட்டுப்போட்டி

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறை நடாத்தும் விளையாட்டுப் போட்டிகள் கடந்த புதன் ஆரம்பமாகின.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் விளையாட்டு உள்ளரங்கில் வவுனியா மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தமிழ் மாறன் தலைமையில் போட்டிகள் நடைபெற்றன. கடந்த புதன் பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளின் முடிவுகள் வருமாறு, பூப்பந்தாட்டம்-ஆண் 1ஆம் இடம் ஆனந்தராஜா-கவின்கலிஸ்ரன் (வவுனியா தமிழ் மத்தியமகாவித்தியாலயம்) 2ஆம் இடம் பாரதி ஆனந்தன்-ஜோன்ஸ் அமல்ராஜ் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்)

பூப்பந்தாட்டம் 17 வயதின் கீழ் பெண்கள். 1ஆம் இடம் அனுஷா தனபாலசிங்கம் (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) 2ஆம் இடம் சுதர்சினி தேவராஜ் (வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி) பூப்பந்தாட்டம் 17 வயதின் மேல் பெண்கள். 1ஆம் இடம் பிருந்தா செல்வநாதன் (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) 2ஆம் இடம் ஜெஸ்மி செல்வமணி (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்.

மேசைப்பந்தாட்டம் ஆண்கள் 1ஆம் இடம் சிவராஜா நர்த்தனன் (பண்டாரிக்குளம் விபுலானந்தா மகாவித்தியாலயம்) 2ஆம் இடம் ஈஸ்வரன் ஜரோஷினன் (பண்டாரிக்குளம் விபுலானந்தா மகாவித்தியாலயம்)

மேசைப்பந்தாட்டம் பெண்கள் 1ஆம் இடம் துசேந்தினி சண்முகராஜா (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) 2ஆம் இடம் சங்கீர்த்தனா ராஜன் (இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்)(10)

## சர்வதேச செஸ் அபிஜித் அபாரம்

சர்வதேச செஸ் தொடரில் இந்தியாவின் கிராண்ட் மாஸ்ரர் அபிஜித் குண்டே தொடர்ந்து முதல் இடத்தைத் தக்க வைத்துள்ளார்.

கொல்கட்டாவில் முன்னணி வீரர்கள் பங்கேற்கும் சர்வதேச ஓபன் செஸ் தொடர் நடக்கிறது. ஐந்தாம் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது. இதில் இந்தியாவின் அபிஜித் கடந்த சுற்றில் தன்னுடன் முதல் இடத்தை பகிர்ந்திருந்த வங்களாதேசத்தின் எனாமுல்ஹுசேனுடன் மோதினார். விறுவிறுப்பாக நடந்த போட்டியில் அபிஜித் வெற்றி பெற்று, 4.5 புள்ளிகளுடன் தொடர்ந்து முதல் இடத்தைத் தக்க வைத்துக்கொண்டார். தோல்வி அடைந்த எனாமும் 3.5 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டார். முதல் நிலை வீரரான பெலாராசின் அலெக்சி அலெக்சாண்ட்ரோவ், ரஷ்யாவின் அலெக்சாண்டர் ஓமினியை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் அலெக்சாண்ட்ரோவ் 4 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திற்கு முன்னேறினார்.

## ஐ.சி.சி ஒருநாள் போட்டி தரவரிசை சிறிலங்காவுக்கு இரண்டாவது இடம்

ஐ.சி.சி(சர்வேச கிரிகெட் கவுன்சில்) ஒரு நாள் போட்டியின் அடிப்படையில் நாடுகளின் வரிசைப்பட்டியலை வெளியிட்டுள்ளது. அதன்படி இந்தியா 102 புள்ளிகள் பெற்று 7-ஆவது இடத்தில் உள்ளது.

பாகிஸ்தானுக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தின் மூலம் இந்தியா 10.5புள்ளிகளை பெறும்.

உலக சம்பியனான அவுஸ்திரேலிய அணி 137 புள்ளிகள் பெற்று தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளது.இலங்கை 119 புள்ளிகள் பெற்று 2-ஆவது இடத்திலும், நியூசிலாந்து117 புள்ளிகளுடன் 3-ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 108 புள்ளிகளுடன் 4-ஆவது இடத்தில் உள்ளன.


மேற்கிந்தியத்தீவுகள் 5-ஆவது இடத்திலும், இங்கிலாந்து 6-ஆவது இடத்திலும்,தென் ஆபிரிக்கா 8-ஆவது இடத்திலும், சிம்பாப்வே 9ஆவது இடத்திலும்,கென்யா10-ஆவது இடத்திலும், வங்காளதேசம் கடைசி இடத்திலும் உள்ளன.

## பிரேசில் கால்பந்து வீரர் ரொனால்டோ மீண்டும் திருமண பந்தத்தில் இணைகிறார்



பிரேசில் கால்பந்து வீரர் ரொனால்டோவுக்கு வரும் சனவரியில் திருமணம் நடக்கவுள்ளது. பிரேசில் அணியின் நட்சத்திர கால்பந்து வீரர் ரொனால்டோ இருவருக்கும் பிரபல மாடலான டேனியலாசிகரெல்லி இருவருக்கும் வரும் சனவரியில் திருமணம் நடக்கவுள்ளது. இந்த திருமணத்தை பரிசில் நடத்த இருவரும் திட்டமிட்டுள்ளனர். இதற்கான ஆடைகளை வாங்குவதற்காக இருவரும் நேற்று முன்தினம் ரோம் சென்றார்.28 வயதான ரொனால்டோவுக்கு இது இரண்டாவது திருமணம். நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மிலேன் டொமிங்ஸ் என்ற பெண்ணை மணந்த இவர் கருத்து வேறுபாட்டால் விவாகாரத்துப் பெற்றார். இவர்களுக்கு 3 வயதில் ஒரு மகனும் உண்டு. பெண் ரசிகர்களை அதிகம் கவர்ந்த இவர் 3 முறை (பிபா சிறந்த கால்பந்து வீரர்) விருது வாங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



எமது விடுதலைப் போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல, கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 14-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


# அபத்தமான பேச்சு!

" 1994இல் இடப்பட்ட சமாதானத்திற்கான அடித்தளம், 2001ஆம் ஆண்டில் சீர்குலைக்கப்பட்டது" என்ற சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்களுக்கு அர்த்தம் கண்டு பிடிப்பதென்பது மிகவும் கடினம் மிக்க தொன்றாகும். ஏனெனில் இதற்கு அர்த்தம் கற்பிக்கப்போனால் மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது தவிர்க்கப்பட முடியாததொன்றாகிவிடும்.

1994 இல் சந்திரிகா குமரதுங்க பிரதமராக இருந்த போது சமாதானத்திற்கு எனப் போடப்பட்ட அடித்தளம் மிகவும் பலவீனமானது. அத்தளத்தில் நின்று சமாதானத்தை ஒரு வருடத்திற்கு தானும் பாதுகாக்க முடியாது போய்விட்டது என்பதே உண்மையாகும். இதன் காரணமாக 1995 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுப்பகுதிக்குள்ளேயே யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது.

ஆனால் யுத்தம் தொடங்கியதும் சனாதிபதி அதுவே சமாதானத்திற்கான அடித்தளம் என புதியதொரு தத்துவத்தை முன்வைக்கத் தவறவில்லை. அதாவது சமாதானத்திற்கான யுத்தம் எனத் தமிழர் மீது சந்திரிகா குமரதுங்க நடத்திய யுத்தத்திற்குப் புதியதொரு தத்துவ விளக்கம் கொடுக்கப்பட்டது.

இருப்பினும் சந்திரிகா குமரதுங்கவின் சமாதானத்திற்கான யுத்தமும் வெற்றி பெறவில்லை. வன்னிப்பிராந்தியத்தைக் கைப்பற்றி வடக்கையும், தெற்கையும் இணைக்கப் போவதாகத் தொடங்கிய யுத்தம் இருந்ததையும் இல்லாததொன்றாக்கியது.

எடுத்துக்காட்டாக ஆனையிறவுப் பெரும் படைத்தளத்தை சிறிலங்கா இராணுவம் இழந்தது. அத்தோடு இதுவரையில் இராணுவ மேலாதிக்க நிலையில் இருப்பதாகக் காட்டிக் கொண்ட சிறிலங்கா இராணுவம் அதனையும் கட்டிக்காக்க முடியாது போனது.

வேறு விதமாகக் கூறுவதானால் சமாதானத்திற்கான யுத்தம் என்ற சனாதிபதி சந்திரிகாவின் தத்துவம் பெரும் தோல்வியைச்சந்தித்தது. அத்தோடு யுத்தத்தின் மூலம் சமாதானம் என்பதற்குப் புதிய விளக்கம் ஒன்றும் கொடுக்கத்தக்கதாகியது. அதாவது புலிகள் யுத்தத்தின் மூலம் அடைந்த மேலாண்மை சமாதான முயற்சிகளுக்குவித்திட்டது.

இதேவேளை யுத்தத்தின் மூலம் சனாதிபதி சந்திரிகா ஈட்டமுனைந்தது சமாதானத்தின் மூலம் சாத்தியமாகியது. அதாவது தரைவழிப்பாதை திறந்து வைக்கப்பட்டது. 2002இல் ஏ-9பாதை சமாதான உடன்பாட்டின் காரணமாக மக்களின் பயன்பாட்டிற்கெனத் திறந்து விடப்பட்டது.

இதன் மூலம் சனாதிபதி சந்திரிகா யுத்தத்தின் மூலம் இடமுயன்ற அடக்கு முறைக்கான அடித்தளமும் உடைத்தெறியப்பட்டது. இந்நிலையில் 2001இல் மக்கள் அளித்த தீர்ப்பின் அடிப்படையில் சமாதானத்திற்கான அடித்தளத்தை இட ஐ.தே. முன்னணி அரசாங்கம் முற்பட்டது. இதன் அடிப்படையாக யுத்தநிறுத்தம் அமைந்தது.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவோ நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் இச்சமாதானத்திற்கான அடித்தளத்தில் ஓங்கி அடித்துள்ளார். சமாதானத்தின் அடித்தளம் இன்று ஆட்டம் காணும் நிலையை எட்டியுள்ளது. அதாவது சனாதிபதி சந்திரிகா சமாதானத்திற்கென இட்ட அடித்தளம் பல வீனமானதாக இருந்தமையால் சிதைந்து போக, 2001 இல் ஐ.தே முன்னணி இட்ட அடித்தளத்தை தகர்த்தெறிய சந்திரிகா தனது அதிகாரத்தைப் பிரயோகிக்க முற்பட்டுள்ளார்.

இந்நிலையில் தற்பொழுது எழும் கேள்வியானது சனாதிபதி சந்திரிகா குறிப்பிடுவது என்ன என்பதே ஆகும். அதாவது 2001இல் சிதைக்கப்பட்ட சமாதானத்திற்கான அடித்தளம் எது? யாரால் குலைக்கப்பட்டது? ஏனெனில் 1994இல் சமாதானத்திற்கென இடப்பட்டதான சனாதிபதி சந்திரிகா கூறும் அடித்தளம் அது இடப்படும் முன்னரே சீர்குலைக்கப்பட்டது. 2001இல் மக்களின் ஆணையில் சமாதானத்திற்கான அடித்தளம் இடப்பட்டதேஒழிய சீர்குலைக்கபடவில்லை. மாறாக அத்தளத்தை சிதைப்பதிலேயே சனாதிபதி சந்திரிகா தற்பொழுது அக்கறை கொண்டுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குழப்பமாகப் பேசுவது ஒன்றும் புதிதல்லத்தான். ஆனால் இல்லாததை உண்டெனப் பேசுவதும், சாதிக்காததைக் சாதித்ததெனக்கூட கூறுவதும் ஒரு புறத்தில் கேவலமானது மறுபுறத்தில் கேலிக்குரியது அதிலும் சனாதிபதி பதவியை பத்தாண்டுகள் நிறைவு செய்யும் விழாவில் பேசுவது அபத்தமானது.

# நிபந்தனையுடன் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது பற்றி ஜே.வி.பி பரிசீலனை

### —ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க

கூட்டமைப்பு அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காக நிபந்தனையுடன் ஆதரவளிப்பது பற்றி ஜே.வி.பி இப்பொழுது பரிசீலனை செய்து வருகின்றதென்று தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜே.வியின் முன்னாள் தலைவர் ரோகண விஜயவீர மரணமடைந்து 15 வருடங்கள் பூர்த்தியடைந்ததை முன்னிட்டு கொழும்பில் இடம் பெற்ற ஞாபகார்த்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சோமவன்ச அமரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் நாட்டின் சார்பிலும் மக்களின் சார்பிலும் சகலசவால்களையும் அரசாங்கம் சமாளிப்பதற்கு ஏதுவாக ஜே.வி.பி அதன் பூரணஆதரவை வழங்குவோமென்றும் தெரிவித்ததுடன் வறிய மக்களின் மேம்பாட்டிற்காக பாடுபடுவதே ஜே.வி.பியின் பிரதான நோக்கம் என்றும் தெரிவித்தார்.

காலம் சென்ற தலைவர் ரோகண விஜயவீர கட்சிக்கு உரிய தலைமைத்துவத்தை வழங்கியதால் கட்சி நாட்டின் ஏழைமக்களின் மனதில் ஆழப்பதிந்துள்ளதென்றும் அமரசிங்க தெரிவித்தார்.

முதலாளித்துவ சக்திகளினால் இன்று ஜே.வி.பி கட்சியை அழித்துவிட முடியாதென்றும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின்சில்வா கூறுகையில்;

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை தமது கட்சி தோற்கடிக்கும் என்றும் ஜே.வி.பி சனநாயக நடைமுறைகளில் இருந்து ஒரு போதும் விலகிச் செல்ல மாட்டாதென்றும் அவர் உறுதி கூறியுள்ளார்.

# தேர்தலுக்கு நிதி தேவையாயின் திறைசேரி மூலம் பெற்றுக்கொள்ளலாம்

### —பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவிப்பு

அரசாங்கத்தின் வரவு செலவு திட்டத்தில் தேர்தலொன்றுக்கான நிதி ஒதுக்கப்படவில்லை என்பதால் அடுத்த ஆண்டு தேர்தல் எதுவும் நடத்தப்பட மாட்டாது என அரசாங்கம் கூறியிருப்பது ஏற்பு டையதல்ல என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. அடுத்த ஆண்டில் சனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்துவது தொடர்பில் ஏற்பட்டுள்ள பிணக்கு தொடர்பாக கருத்துரைத்த ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் தேர்தல் ஒன்று நடத்தப் படவேண்டிய தேவை ஏற்பட்டால் திறைசேரி மூலம் நிதி ஒதுக்கீடு செய்வதன் மூலம் தேர்தலை நடத்த முடியும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# வறுமைக்கும் பொருளாதார பின்னடைவுக்கும் நிரந்தர சமாதானமின்மையே காரணம்

### —மல்வத்த பீடாதிபதி தெரிவிப்பு

நாட்டின் வறுமையும் பொருளாதாரப் பின்னடைவுகளும் ஏற்படுவதற்கு முக்கிய காரணம் நிரந்தர சமாதானம் இல்லாமையே என்று மல்வத்த பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று மல்வத்த பீடாதிபதி திக்கட்டுவாவே சிறிசித்தானந்த சுமங்கல மகாநாயக்க தேரரை சந்தித்த ஐக்கியதேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் போராசிரியர் ஜீ.எல்.பீரிசிடம் தனது கருத்துக்களைத் தெரிவிக்கையிலேயே அவர்.இவ்வாறு தெரி வித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டில் இந்த நிலைமை காரணமாக பெறுமதிவாய்ந்த அபிவிருத்தி உதவிகள் நாட்டிற்கு கிடைக்காமல் போயிருக்கின்றன என்றும் குறிப்பிட்ட மகாநாயக்கர், சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு இரண்டு பிரதானகட்சிகளினது தலைவர்கள் ஒன்று சேர வேண்டுமென்று கேட்டு கொண்டதுடன் இந்த தலைவர்கள் எடுக்கின்ற எந்தவொரு தீர்மானங் களும் சகல சமூகங் களுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டு மென்றும் தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் சனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையே தற்பொழுது நடைபெறுகின்ற பேச்சுவார்த்தைகள் சரியான வழியில் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கையாகு மென்றும் மகாநாயகர் தெரிவித்தார். இதற்கு பேராசிரியர் பீரிஸ் பதிலளித்துப் பேசுகையில் டோக்கியோ, ஒஸ்லோ பிரகடனங் களின் அடிப்படையில் முன் னெடுக்கப்படும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை ஐக்கிய தேசியக் கட்சி பூரணமாக ஆதரிக்குமென்று தெரிவித்ததுடன், தமது கட்சி ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை ஊக்கு விப்பதற்கு எப்பொழுதும் ஆதரவு தெரிவிக்குமென்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

சனாதிபதிக்கும், எதிர்க்கட்சித் தலைவருக்குமிடையில் ஏற்படவிருக்கும் உடன் பாட்டில் தான் தாங்கள் தேசிய சமாதான ஆலோசனை சபையில் கலந்து கொள்வது தங்கியிருக்கின்றதென்று பேராசிரியர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

# நோர்வே சமாதானத் தூதுவர் இ.தொ.கா வினருடன் சந்திப்பு

தற்போது கொழும்பில் தங்கியிருக்கும் நோர்வே விசேட பிரதிநிதி எரிக் சூல்ஹெய்ம் அரசியல் கட்சிகளுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தைளை நடத்தி வருகின்றார். நேற்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளை சந்தித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான அக்கட்சி பிரதிநிதிகளையும் இன்று நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிகசூல்ஹெய்ம் சந்தித்துள்ளார். இச் சந்திப்பு தொடர்பாக அக் கட்சியின் துணைச்செயலாளரும், அமைச்சருமான முத்து சிவலிங்கம் தகவல் தெரிவிக்கையில், சமாதானப் பேச்சுவார்த்தை எந்தளவிற்கு விரைவாக ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை தாம் வலியுறுத்தியுள்ளதாகக் கூறினார். விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனை அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதில் தமது கட்சி முழுமையான ஆதரவை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார். பிரதியமைச்சர் எம்.எஸ்.செல்லச்சாமி, பைசால் முஸ்தபா (பா.உ), வி.புத்திரசிகாமணி (பா.உ), ஆர்.யோகராஜன முன்னாள் (பாஉ) ஆகி யோரும்இக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

### -மாவனல்லப் பகுதியில்

# படையினரிடம் இல்லாத துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

மாவனல்லப் பொலிசார் நவீன தன்னியக்க துப்பாக்கியொன்றை நபர் ஒருவரிடமிருந்து கைப்பற்றியுள்ளனர்.

சிறிலங்கா ஆயுதப்படையினரிடம் கூட இந்தளவு நவீன துப்பாக்கி இல்லையென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் துப்பாக்கியை வைத்திருந்த நபரிடம் இருந்து பாவிக்கப்படாத துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பிற்காக தாம் சவுதிஅரேபியா சென்றிருந்த போது இந்த துப்பாக்கியை அங்கு கொள்வனவு செய்ததாக சந்தேக நபர் தெரிவித்துள்ளார். குறித்த நபர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### பொலிசாரின் துப்பாக்கிகளை பறித்துச்சென்றோர் கைது

பொலனறுவையில் இரவு நேர கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிஸ்காரர்களின் தன்னியக்கத் துப்பாக்கிகள் இரண்டையும் பறித்துக் கொண்டு ஓடிய இரு சந்தேக நபர்களை பொலனறுவ பொலிசார் கடந்த 11 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

### திருமலை உவர்மலைப் பகுதியில்

# இந்து ஆலயங்களை அகற்ற அரசு இட்ட உத்தரவிற்கு எதிர்ப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அரச காணிகளிலும், பௌத்த மக்கள் குடியிருக்காத இடங்களிலும் பௌத்த விகாரைகள் நிறுவப்பட்டுள்ளன. அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்காமல் இந்துக் கோயில்களை மட்டும் அகற்றுமாறு உத்தரவிடுவது அப்பட்டமான பாராபட்ச நடவடிக்கை ஆகும் என்று திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் . கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் செயலாளருக்கு அறிவித்துள்ளார்.

"பௌத்தம் என்ற பெயரில் என்ன நடவடிக்கை மேற்கொண்டாலும் அதைப்பொறுத்துக்கொள்வதற்குத் தயாராக இருக்கும் அரசு இவ்வாறான செயல்களில் ஏனைய மதங்களைச் சேர்ந்த பக்தர்களுக்கு எதிராக சுறுசுறுப்பாக இருப்பதை, திருமலையில் விஷ்ணு கோவிலை அகற்றும் படி உத்தரவிட்டுள்ளது. தெளிவாக எடுத்துக்காட்டுகிறது" என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

திருகோணமலை-உவர்மலைப்பிரதேசத்தில் கீழ் வீதியில் அமைந்துள்ள சௌந்தர ஸ்ரீவிஷ்ணு ஆலயம், விஷ்வரூபா அனுமான் ஆலயம் ஆகியவற்றை அகற்றும் படி ஆலயங்களின் நிர்வாகங்களுக்கு கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் கீழ் வரும் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் 1981 இன் 57 இலக்கப் பாதுகாப்புச் சட்டத்தின் 31(2) பிரிவின் படி உத்தரவிட்டுள்ளது. அது தொடர்பாகவே பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் இக்கடிதத்தை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு அனுப்பியுள்ளார். "ஆயிரக்கணக்கான இந்து மக்கள் உவர் மலைப்பிரதேசத்தில் வசித்து வருகின்றனர். அவர்கள் விஷ்ணு ஆலயத்திற்குச் சென்று வழிபடுகின்றனர். விஷ்ணு ஆல்யத்தை அகற்ற நடவடிக்கை எடுப்பது இப்பிரதேச இந்து மக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்தும் இன, மத குரோதங்களுக்கு அது வழிவகுக்கும். விஷ்ணு ஆலயம் நீண்டகாலமாக அப்பகுதியில் அமைந்துள்ளது. அக்கோயில் கரையோரப்பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வராது" என்றும் சம்பந்தன் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். "இந்துக் கோயில்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்து பக்தர்களின் சமயவழிபாட்டு உரிமைகளை மறுப்பதாக இந்த நடவடிக்கை அமைகின்றது. எனவே மத நல்லுறவைக் கருதி இந்துக்கோயில்களை அகற்றும் நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடவேண்டும்" இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார். கடிதத்தின் பிரதி கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் ஆர்.ஏ.டி.பி சமரநாயக்காவுக்கும் அனுப்பியுள்ளார். (25)

# தலைவர் பிரபாவின் உதவியுடன் ஐ.தே.க சனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முயற்சி

### ஜே.வி.பி குற்றச்சாட்டு

எதிர் வரும் சனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளராகப் போட்டியிடவிருக்கும் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆதரவுடன் சனாதிபதியாக வர முடியும் என நம்பிக்கை கொண்டிருப்பதாக பேரினவாதக் கட்சியான ஜே.வி.பி. கூறுகின்றது.

நேற்று மாலை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் அக் கட்சியின் ஸ்தாபகர் ரோகண விஜயவீரவின் 15 ஆவது சிரார்த்த தினம் (கார்த்திகைப் பூக்கள் தினம்) நடைபெற்றது இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, சனாதிபதி தேர்தல் 2005 இல் நடந்தாலென்ன, அது 2006 இல் நடந்தாலென்ன அது எமக்குப் பிரச்சினையல்ல. அதைப் பற்றி தேர்தல் ஆணையாளர் தீர்மானிப்பார். ஆனால் நிறைவேற்று அதிகாரமுள்ள சனாதிபதி முறை ஒழிக்கவேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இதற்குப் பிரதான கட்சிகள் தயார் இல்லை, உத்தேச சனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் ஆதரவைப் பெற்று வெற்றி பெறலாம் என நினைக்கின்றார். இதனை நாம் நிச்சயம் தோற்கடிப்போம். எமது கட்சிக்கு உடனடியாக அரசாங்கத்தை அமைக்கும் நோக்கம் எதுவுமில்லை. அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டும். சனாதிபதி தன் இஷ்ரப்படி அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொண்டே செல்கின்றார். இந்த நிலை நீடிக்குமானால் எமது தற் போதைய நிலையை மீளாய்வு செய்ய நேரிடும் என்பதை அவ ருக்கு தெளிவு படுத்தி விட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (32)

## லண்டன்...

லண்டன் புறப்பட்டுச் சென்ற அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களையும் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள், துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் அருண், தமிழீழ கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் ரமேஸ், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, கேணல் சூசை, கேணல் சொர்ணம், கேணல் ஜெயம் மற்றும் தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள் ஆகியோர் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் வைத்து வழியனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

(சோ,32)

## எழுச்சி...

ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மேஜர் கோபியின் திருவுருவப்படத்திற்கு பூநகரி பிரதேச செயலர் மா.சிறீஸ்கந்தகுமார் மலர் மாலை அணிவிக்க, மேஜர் கணேஷ்சின் திருவுருவப்படத்திற்கான மலர் மாலையினை மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழன் அணிவித்தார். அதனைத் தொடர்ந்து மேஜர் கோபி, மேஜர் கணேஸ் ஆகியோரின் திருவுருவப்படங்களிற்கான ஈகைச்சுடர்கள் ஏற்றப்பட்டது. ஈகைச் சுடரினை மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன், பூநகரி வர்த்தக சங்கத் தலைவர் பொ.ரவி ஆகியோர் ஏற்றிவைத்தனர். நினைவு நிகழ்விற்கான பொதுச் சுடரினை தமிழீழ கடற்புலித் துணைத் தளபதி செழியன் பூநகரி பிரதேச காவல் துறைப் பொறுப்பாளர் சுந்தர் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து நிகழ்வின் சிறப்புரையினைப் பூநகரி பிரதேச செயலர், பூநகரி பிரதேசப் பங்குத் தந்தை, தமிழீழ கடற்புலி மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பூரணி ஆகியோர் ஆற்றினர்.

இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் துறைசார் பொறுப்பாளர்கள், மாணவர்கள், பார்வையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தார்கள். பூநகரி வெற்றி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சிறப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டது. அத்துடன் மகளிர் இசைக் குழுவினரின் இசை நிகழ்வுகள் இடம்பெற்றது. (தீ,34)

## மன்னாரில்...

இதேவேளை, இவரது சடலத்தை படம் பிடிக்கச் சென்ற பத்திரிகையாளரொருவர் அங்கு காணப்பட்ட சில இளைஞர்களினால் தடுக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். அங்கு கடமையிலிருந்த பொலிசாருக்கு முன்னிலையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## தென்...

இவ் வாறு இராணுவ புனரமைப்புக்கு சிறிலங்கா அரச படைகளால் பயன்படுத்தப்படுவதாகத் தெரியவருகிறது. குறிப்பிட்ட இராணுவப் பயிற்சி முகாம்களில் புதிய மண் அணைகள், கம்பி வேலிகள், காவலரண்கள் போன்றனவும் உருவாக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு மாதத்திற்குள் அனைத்துப் பயிற்சி முகாம்களும் புதிதாகப் புனரமைக்கப்பட வேண்டுமென கீழ்நிலைக் கட்டளைத் தளபதிகளுக்கு இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட அறிவுறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

### - சாரதி அனுமதிப்பத்திரம் -

# நேற்று பரீட்சைக்குதோற்றாதோர் இன்று தோற்றும்படி அறிவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

நேற்று நடைபெற்ற மோட்டார் வாகனம் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் எழுத்துப் பரீட்சைக்கு தோற்றத் தவறிய 111 பரீட்சார்த்திகளது நலன் கருதி இன்று காலை 9.00 மணிக்கு விசேட பரீட்சை மாவட்டச் செயலகத்தில் கேட்போர் கூடத்தில் நடைபெறும் என மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார். இதிலும் தோற்றாத சகல பரீட்சார்த்திகளது விண்ணப்பங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டதாகக் கருதப்படும். இதனை மீண்டும் ஒழுங்குபடுத்துவது மிகவும் சிரமமான விடயமாதலால் சகலரும பங்குபற்றுமாறும் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் அடையாள அட்டையைச் சமர்ப்பிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (சோ,கு)

# தொண்டராசிரியர் நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக நடவடிக்கை

நாடு முழுவதும் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான சுற்று நிருபம் கல்வி அமைச்சினால் இவ்வாரமளவில் வெளியிடப்படவிருக்கின்றது. இதன் மூலம் மூன்று தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும். ஒன்று ஆசிரியப்பிரமான சேவையின் படி அடிப்படைத் தகைமை பெற்றிருக்க வேண்டும். இரண்டாவது அத் தொண்டர் ஆசிரியர் படிப்பிக்கும் பாடசாலையில் வெற்றிடம் இருக்க வேண்டும். மூன்றாவது ஜி.சி.ஈ உ/த பரீட்சையில் 4 பாடங்களுக்குத் தோற்றியிருந்தால் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருக்க வேண்டும். அத்துடன் 180 புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும். ஜி.சி.ஈ உ/த மூன்று பாடங்களில் தோற்றியிருப்பின் மூன்று பாடங்களில் சித்தியும் நான்காவது திறமை கான் பாடத்தில் குறைந்தது 30 புள்ளிகள் பெற்றிருக்க வேண்டும்.

1.1.2004 அன்று கஷ்ட மற்றும் மிகக் கஷ்டமான பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் தொடர்ச்சியாக மூன்று வருடங்கள் பணி புரிந்த தொண்டர் ஆசிரியர்களே மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நிரந்தர நியமனம் பெறுவர் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் [illegible].மகாசிவம் தெரிவித்தார்.

### காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

காது, மூக்கு, தொண்டை ஆகியவற்றிற்கான சத்திரசிகிச்சை எதிர்வரும் 19ஆம் திகதியன்று கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் நடைபெறவுள்ளது. எனவே கீழ்க் குறிப்பிட்ட பெயருடையவர்கள் ஏற்கனவே சத்திர சிகிச்சைக்கென பதிவுகளை மேற்கொண்டவர்கள் எதிர்வரும் 18ஆம் திகதியன்று கிளி. மாவட்ட வைத்தியசாலைக்குச் சமுகம் கொடுத்து நோயாளர் விடுதியில் தங்குமாறு கிளி. மாவட்ட வைத்திய அதிகாரி வேண்டுகை விடுத்துள்ளார்.

ஆர்.சாந்தகுமார் (வயது 13) மே.பா.எஸ் ராசகுமார் 50ஆவது வீட்டுத் திட்டம் ஸ்கந்தபுரம், ஐ.டிலுக்சிக்கா, (வயது 4) மே.பா.இந்திரகுமார், செல்வாநகர் கிளிநொச்சி (சோ)

# சூறாவளி ஏற்படுமென்ற தகவலுக்கு காலநிலை அவதான நிலையம் மறுப்பு

நாட்டில் எதிர்வரும் இரண்டு வாரக்காலப்பகுதியில் சூறாவளி ஏற்பட வாய்ப்பிருப்பதாக வெளியான தகவலை காலநிலை அவதான மையம் மறுத்துள்ளது

எனினும் சாதாரணமாக நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இவ்வாறான காலநிலை காணப்படுவதால் மக்கள் அவதானமாக இருப்பது சிறந்தது என அந்த மையம் தெரிவித்துள்ளது. நாட்டில் இன்னும் இரண்டு வாரக்காலப் பகுதியில் இயல்பற்ற காலநிலை ஏற்படக்கூடும் இதன் காரணமாக மண்சரிவுகளும் வெள்ளப்பெருக்குகளும் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன.எனினும் இந்த காலப்பகுதியில் சூறாவளி ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை இதேவேளை இந்தக் காலப்பகுதியில் சூறாவளி ஏற்பட வாய்ப்புகள் இல்லையெனக் கூறும் பேராதெனிய புவியியல் பேராசியர் ஒருவர் காலநிலை மாற்றங்களை மக்களுக்கு தெரியப் படுத்தும் காலநிலை அவதான மையம் சரியான தகவல்களை வழங்க வேண்டும் என்றார். (32)

## ஈ.பி.டி.பி...

கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவியிலிருந்து டக்ளசால் இந்தியாவிலிருந்து தொலைபேசி முலம் பதவி விலக்கப்பட்டுள்ளார்.

## மானிப்பாயில்...

தனது மரணத்திற்கு எவரும் காரணமில்லையென எழுதப்பட்ட கடிதமொன்றும் அவரது சட்டைப் பையினுள் இருந்து மானிப்பாய் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளிற்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையினில் பொலிசாரால் நேற்று மதியம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. (27)

## நிதி...

இவ் வருட முடிவிற்கு இரண்டு மாதத்திற்கும் குறைவான நாட்களே தற்போதுள்ளது. இந்நிலையில் நிதி ஒதுக்கீடு தொடர்பாகவும், அறிவிக்கப் பட்டுள்ளது. ஆயினும் பருவமழை காலமும் நிலவி வருவதால் நிதியை முழுமையாக செலவு செய்வதென்பது கேள்விக்குரிய விடயமாக உள்ளதாக வும், அரச திணைக்கள வட்டாரங்கள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளன. (27)

## இல...

இதேவேளை இன்று வடமராட்சி கிழக்கின் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் உள்ள நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலயத்திற்கும் மற்றும் நாகதீப விகாரைக்கும் பிரதிநிதிகள் விஜயம் செய்யவுள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன் யாழ். மாவட்டத்திலுள்ள பொதுசன அமைப்புக்களினது பிரதிநிதிகளுடன் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பான ஆலோசனைகளில் இவர்கள் ஈடுபடவுள்ளதாகவும், தெரியவருகிறது. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.